Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 04 ஞாயிற்றுக்கிழமை (19.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 213

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

- ஆலடி மாநாடு
- வியாசர்

பதில்களுடன்
உங்கள்
**சங்குநாதம்**
இன்றைய
**வலம்புரி**யில்

## மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களே நல்லூர் திருவிழாவுக்கு அனுமதி

### யாழில் இராணுவத் தளபதி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய பெருந் திருவிழாவிற்கு கொரோனா நெருக்கடி காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களே அனுமதிக்கப்படுவார்கள் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டில் ஏனைய பாகங்களில் 23

## பாடசாலைகளுக்கான விடுமுறை நீடிப்பு

### 27ம் திகதியே மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு வார கால விடுமுறை மேலும் ஒரு வார காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. 23

## எதிர்காலத்தில் வடக்கில் இராணுவக் குறைப்பு

யாழில் இராணுவத் தளபதி 21

## சுகாதார பரிசோதகர்கள் இன்றி தேர்தலை நடத்த முடியாது

மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு 03

## மக்கள் ஒத்துழைத்தாலே கொரோனாவை கட்டுப்படுத்தலாம்

சுகாதார அமைச்சர் பவித்ரா 09

## யாழ்.பல்கலையில் கத்திக்குத்து மாணவன் படுகாயம்

ஒருவர் கைது 06

## வடக்கு கடற்பரப்பில் கண்காணிப்பு தீவிரம் 06

# இலங்கையிலிருந்து கொரோனா முழுமையாக நீங்கவில்லை

## யாழில் சவேந்திர சில்வா

*(யாழ்ப்பாணம்)*

இலங்கையிலிருந்து முழுமையாக கொரோனா நீங்கவில்லை. அனைவரும் சுகாதார நடைமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என யாழில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

*(23ஆம் பக்கம் பார்க்க)*



## 6 இலட்சத்தைக் கடந்த கொரோனா பலியெடுப்பு

23ஆம் பக்கம் பார்க்க

## ஒரே குடும்பத்தில் 5 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று ஏற்பட்டுள்ளது.

நேற்று அடை 02

## இராணுவத்தை மீறி வடக்கில் எதையும் செய்ய முடியாது மாற்றம்தான் தமிழர்களுக்கான தீர்வாக அமையும்

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

(வவுனியா)

இராணுவத்தை மீறி வடக்கில் எதனையும் செய்ய முடியாது. மாற்றம்தான் தமிழ் மக்களுக்கான ஒரே தீர்வாக அமையும் என வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

அவர்கள் தொடர்ந்து தெரிவிக்கையில்,

“இலங்கையில் ஜனநாயகம் நிலவுவதாக சுமந்திரனும் சம்பந்தனும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்த நாடு அரசாங்கத்தி 23

## கட்சி ஆதரவாளர்களிடையே சாவகச்சேரியில் மோதல்

### நால்வர் படுகாயம்; மோ.சைக்கிள்கள் சேதம்

(சாவகச்சேரி)

இரு கட்சி ஆதரவாளர்களிடையே இடம்பெற்ற மோதலில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு இரண்டு மோட்டார் சைக்கிள்களும் அடித்து சேதமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி மட்டுவில் பகுதியில் 23

## கல்வியின் சுயாதீனத்தன்மை இராணுவ நலனுக்கு மேலானதல்ல

### குருபரனின் இராஜினாமா தொடர்பில் நீதியரசர் விக்னேஸ்வரன் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் சிவில் நிறுவனங்களின் சுயாதீன தன்மை இராணுவ நலன்களுக்கு மேலானது அல்ல என்ற நிலையே இந்த நாட்டில் காணப்படுகின்றமையை யாழ்.பல்கலைக்கழக 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்**

(3346)

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## ஓலைச்சுவடி சோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

**மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்களுக்கு வவுனியாவில் வாசிக்கப்படும்.** *சுபம்*

தொடர்புகளுக்கு:- **ஓலைச்சுவடி சோதிட நிலையம்**

**கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில்** (3291) **பண்டாரிக்குளம், வவுனியா. 076 328 7119**

## திருத்தம்

18.07.2020ம் திகதி வலம்புரி பத்திரிகையில் இரண்டாம் பக்கத்தில் வெளியாகிய **யாழ். பல்கலைக் கழக ஏலவிற்பனை** தொடர்பான விளம்பரத்தில் மாடுகளின் இனம் தவறுதலாக **“ ஜமுனாபாரி கலப்பு ”** என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை **“ ஜேர்சி கலப்பு ”** என திருத்தி வாசிக்கவும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்

(C-9915)

## 5 பேரு...

யாளம் காணப்பட்டவர்களில் 4 பேர் ஹோமாகமவை சேர்ந்தவர்கள். அந்த பகுதியை சேர்ந்த இராணுவ வீரர் ஒருவர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தார். அதன் தொடர்ச்சியாக ஹோமாகமவில் 31 பொலிஸார் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவரது தாய்க்கு கொரோனா தொற்று 2 நாட்களின் முன்னர் உறுதிசெய்யப்பட்டிருந்தது. இதையடுத்து, இராணுவ வீரரின் குடும்பத்தில் இருந்த 6 பேர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்களிடம்நடத்தப்பட்ட சோதனையில் இராணுவ வீரரின் தந்தை, இரண்டு சகோதரர்கள், பாட்டி ஆகியோர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இராணுவ வீரரின் குடும்பத்தில் 5 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. (ம-03)

## பராமரிப்பும் சுகப்படுத்தலும்

உங்கள் வயோதிப நோயாளர்களை வீட்டில் வைத்துப் பராமரிப்பதில் கஷ்டப்படுகிறீர்களா? உங்கள் உறவுகள் எங்கள் இடத்தில் வைத்து உரிய முறையில் பராமரிக்கப்படுவர்.

(3350)

**தொடர்பு : 077 873 0129**

## அறை வாடகைக்கு உண்டு

நல்லூர் ஆலயத்திற்கு அருகாமையில் இருவர் கொண்ட குடும்பத்திற்கு அறை வாடகைக்கு உண்டு.

(3323)

**071 484 1069**

## Do you want to ACHIEVE YOUR Long Term DREAMS Within a short period AND LIVE HAPPILY with your loved once???




We are seeking for energetic individuals with entrepreneurial mindset to work as a **part time or full time basis** for the post of

**Wealth Planners / Wealth Planning Managers**

**Minimum Requirements:**
- GCE O/L with good communicational skills
- Preferred age group between 20 to 60 male and female
- You need to perform your sales activities in a digital platform
- Those who are willing to work in **JAFFNA, MANNAR, KILINOCHI, MULAITHIVU AND VAVUNIYA**

**Benefits you get by joining our team**
- Fixed allowance from 30,000-50,000 (Based on experience ) or commission based income
- Professional income based on performance
- Attractive incentives with special financial benefits, overseas tour &health insurance for the family

**Sent your CV's to** financialneeda@gmail.com
**Contact us: 077 9991411**

APPLY NOW!

(C-9625)

## இயற்கை மூலிகை மருத்துவம்

உங்கள் அனைத்து விதமான உடல் உபாதைகளையும் பக்க விளைவுகளின்றி, மூலிகை மருத்துவ முறையில் நிரந்தர நிவாரணம் பெற்றிட எங்களை அணுகுங்கள்

**கல்வி கற்கும் மாணவர்கள், தொழில் புரிபவர் மற்றும் குடும்பஸ்தர்களுக்கும்**

மனோசக்தி மற்றும் அல்பா தியானமுறை பயிற்சிகள் **Zoom** இல் வழங்கப்படும்.

**கடன் தொழில் பிரச்சினைகளில் இருப்பவரும் பங்கு பற்றலாம்.**

(3355)

**அகஸ்திய இயற்கை மருத்துவ சிகிச்சையம்**
**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் – கிழக்கு கொக்குவில்**
**தொ.பே. இல : 077 912 8944**

## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**கடந்த 20.06.2020 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்**

**அமரர்**

# வேலுப்பிள்ளை இலட்சுமி

**[ கிங்கோ மேஜர் முரளி அம்மா ]**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.07. 2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் மு.ப 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

**சர்வோதய வீதி, ஆவரங்கால், புத்தூர்.** (3354) **குடும்பத்தினர்**

# பொதுச்சுகாதார பரிசோதகர்கள் இன்றி பொதுத்தேர்தலை நடத்த முடியாது

## கைவிரித்தார் தேர்தல்கள் ஆணையாளர்

(கொழும்பு)

**பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் ஒத்துழைப்பின்றி நாடாளுமன்ற தேர்தலை நடத்துவது சிரமமான விடயம் என்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**



கொரோனா அச்சுறுத்தல் இல்லாவிடினும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் ஒத்துழைப்பின்றி தேர்தலை நடத்துவது சவாலானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் நேற்று முன்தினம் கொரோனா ஒழிப்பு நடவடிக்கைகளிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் அசௌகரியத்திற்கு உள்ளாவதால் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு எந்தவொரு அதிகாரங்களையும் வழங்க முடியாது என்று சுகாதார அமைச்சர் அண்மையில் தெரிவித்த கருத்தை கண்டித்தே பணி விலகலை முன்னெடுத்துள்ளனர். (ஜ-4)




# ஆபத்தான நாடுகள் பட்டியலில் இலங்கை

(கொழும்பு)

அரசாங்கம் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையை மறைத்து வருவதுடன் தேவையான அளவுக்கு பரிசோதனைகளை நடத்துவதில்லை எனவும் ஆபத்தான நாடுகள் பட்டியலில் எமது நாடும் இடம்பிடித்துள்ளதாகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தாதியர் தொழிற்சங்க செயற்பாட்டாளருமான சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் மற்றும் இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி வெளியிடும் கருத்துக்களில் முரண்பாடுகள் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் .சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி வேண்டாம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எந்த எண்ணமும் தனக்கில்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பெற்றுக்கொள்வார் என அந்த கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஜ-4)



# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு





(குப்பிழான்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் யாழில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் தமிழரசுக் கட்சித் தலைவரும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்..கிளிநொச்சித் தேர்தல் மாவட்டத்தின் முதன்மை வேட்பாளருமான மாவை சேனாதிராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 13 பக்கங்களைக் கொண்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை அவரே வெளியிட்டு வைத்தார்.

இந்நிகழ்வில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் வேட்பாளருமான எம்.ஏ. சுமந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் வேட்பாளர்களான சிவஞானம் சிறீதரன், குருசுவாமி சுரேந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈஸ்வரபாதம் சரவணபவன், சசிகலா ரவிராஜ், பாலச்சந்திரன் கஜதீபன், இம்மானுவேல் ஆனோல்ட், வேதநாயகம் தபேந்திரன் ஆகிய வேட்பாளர்களுடன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரும், தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம், கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-18)


## அமெரிக்க தூதரக காரியாலயம், கொழும்பு.

## மொழிபெயர்ப்பாளர்/உரைபெயர்ப்பாளர் [ஆண் / பெண்]

இந்தப்பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கின்றோம். இன, நிற, மத, பால் நிலை அல்லது தேசியம், அரசியல் தொடர்புகள், பால்நிலை மாற்றங்கள், திருமண உறவு என்பனவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமனான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான பன்மைத்துவ தொழிற்படை ஒன்றை அமெரிக்க தூதரகம் எதிர்பார்க்கின்றது.

மொழிபெயர்ப்பாளர்/உரைபெயர்ப்பாளர் தொழில்நுட்ப, தொழில் நுட்பம் சாரா உத்தியோகபூர்வ ஆவணங்கள், உத்தியோகபூர்வ உரைகள், செய்திவெளியீடுகள் ஆகியவற்றின் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான மொழிபெயர்ப்பினை தொழில் முறைதரத்துடன் வழங்குபவராக இருத்தல் வேண்டும். கூட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வருகை புரியும் சந்தர்ப்பங்களில் சமகால உரைபெயர்ப்பை வழங்க வேண்டும்.

வேலைக்குரிய கால அட்டவணை: முழு நேரம் வாரத்தில் 40 மணித்தியாலங்கள்.
மாதாந்த கொடுப்பனவு: 111,819/-

**தேவையான தகைமைகள்:**

1. **கல்வி:** சமூக விஞ்ஞானத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல். அல்லது மொழியியல் / மொழிபெயர்ப்பு கல்வி. தொழில் சார் மொழிபெயர்ப்பாளரின் சான்று அவசியம்.
2. **முன் அனுபவம்:** சமகால உரைபெயர்ப்பு மற்றும் எழுத்து மூல மொழிபெயர்ப்பு இரண்டிலும் குறைந்த பட்சம் இரண்டு வருட அனுவபம்.
3. **மொழி ஆற்றல்:** தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் ஆங்கிலத்தில் உரையாடுதல். (பரீட்சிக்கப்படும்) தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் தமிழில் உரையாடுதல்.
4. **தொழில் அறிவு :** சகல மொழி சார்ந்த வாதங்கள் தொடர்பில் நிபுணத்துவம் இருத்தல் வேண்டும். ஆங்கிலத்திலும் தமிழிலும் சட்ட மற்றும் ராஜதந்திர ரீதியான ஆளுமை இருப்பது அவசியம். கடித வடிவமைப்பு தெரிந்திருப்பது கட்டாயம். இலங்கையின் வெளிநாட்டு விவகாரம், அரசியல், பொருளாதாரம், கலாசாரம், இராணுவ மற்றும் வணிக விவகாரங்கள் தொடர்பான சொற்பிரயோகம் துல்லியமான மொழிபெயர்ப்புக்கு அவசியம்.
5. **திறன் மற்றும் இயலுமை:** பொருளடக்கமும் அர்த்தமும் வெளிப்படும் வகையில் மொழிபெயர்ப்பு / உரைபெயர்ப்பு செய்யும் திறன்.சமகால உரைபெயர்ப்பு திறன் அதிகமாக வரவேற்கப்படுகிறது.மொழி மற்றும் உரை பெயர்ப்பில் அடையாள வெளிப்பாடு, சொற்றொடர், வார்த்தைப் பிரயோகம் என்பவை அச்சொட்டாகப் பிரதிபலிக்க வேண்டும். அடிப்படை கணினி பயன்பாட்டுத்திறனுடன் தமிழில் மிகச்சரியாகவும் விரைவாகவும் தட்டச்சு செய்யும் திறனும் எதிர்பார்க்கப்படுகிறது.

அல்லது

1. **கல்வி:** சமூக விஞ்ஞானத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல். அல்லது மொழியியல் / மொழிபெயர்ப்பு கல்வி.
2. **முன் அனுபவம்:** சமகால உரைபெயர்ப்பு மற்றும் எழுத்து மூல மொழிபெயர்ப்பு இரண்டிலும் குறைந்த பட்சம் மூன்று வருட அனுவபம்.
3. **மொழி ஆற்றல்:** தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் ஆங்கிலத்தில் உரையாடுதல். (பரீட்சிக்கப்படும்) தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் தமிழில் உரையாடுதல்.
4. **தொழில் அறிவு :** சகல மொழி சார்ந்த வாதங்கள் தொடர்பில் நிபுணத்துவம் இருத்தல் வேண்டும். ஆங்கிலத்திலும் தமிழிலும் சட்ட மற்றும் ராஜதந்திர ரீதியான ஆளுமை இருப்பது அவசியம். கடித வடிவமைப்பு தெரிந்திருப்பது கட்டாயம். இலங்கையின் வெளிநாட்டு விவகாரம், அரசியல், பொருளாதாரம், கலாசாரம், இராணுவ மற்றும் வணிக விவகாரங்கள் தொடர்பான சொற்பிரயோகம் துல்லியமான மொழிபெயர்ப்புக்கு அவசியம்.
5. **திறன் மற்றும்' இயலுமை:** பொருளடக்கமும் அர்த்தமும் வெளிப்படும் வகையில் மொழிபெயர்ப்பு / உரைபெயர்ப்பு செய்யும் திறன். சமகால உரைபெயர்ப்பு திறன் அதிகமாக வரவேற்கப்படுகிறது. மொழி மற்றும் உரை பெயர்ப்பில் அடையாள வெளிப்பாடு, சொற்றொடர், வார்த்தைப் பிரயோகம் என்பவை அச்சொட்டாகப் பிரதிபலிக்க வேண்டும். அடிப்படை கணினி பயன்பாட்டுத்திறனுடன் தமிழில் மிகச்சரியாகவும் விரைவாகவும் தட்டச்சு செய்யும் திறனும் எதிர்பார்க்கப்படுகிறது.

**தேவைப்படும் ஆவணங்கள்:**

இந்த பதவிக்கு விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை மின்னணு பிரதிகளுடன் மின்னணு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- கல்விச்சான்றிழ்.
- சேவைகால அனுபவ சான்றிதழ்.
- சேவை தொடர்பான / தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ்
- பிரஜாவுரிமையை சான்றுப்படுத்தும் ஆவணங்கள். (அடையாள அட்டை / கடவுச்சீட்டு / வேறு ஆவணங்கள்).

**விண்ணப்பிக்கும் முறை:**

மேலதிக விபரங்களுக்கு https://lk.usembassy.gov/embassy/jobs/ என்ற எமது இணையத்தளத்தை பார்வையிடவும், உங்கள் விண்ணப்பங்களை இணையத்தளத்தின் ஊடாக மின்னணு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு [ERA] மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் எமது இணையத் தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.

**நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

உங்கள் விண்ணப்பங்கள் 2020 ஜூலை 24 ஆம்திகதி அல்லது அதற்கு முன்னர் எமக்கு கிடைக்கப்பெற வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(c-964)


## ஒரேநாளில் அதிகபட்ச பி.சி.ஆர். பரிசோதனைகள்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளை அடையாளம் காண இலங்கை இதுவரை ஒரு இலட்சத்து 519 பி.சி.ஆர். பரிசோதனைகளை நடத்தியுள்ளது. நேற்று மாத்திரம் நாட்டில் 2 ஆயிரத்து 723 பி.சி.ஆர்.சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுவே, நாட்டில் ஒரேநாளில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான பி.சி.ஆர்.சோதனைகளாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## தனிமைப்படுத்தலிலிருந்து 219 பேர் வீடுகளுக்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவுசெய்த மேலும் 219 பேர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். கடந்த 2 ஆம் திகதி தென்கொரியாவிலிருந்து நாட்டுக்கு வருகை தந்தவர்கள் குறித்த தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பி.சி.ஆர்.பரிசோதனைகளின் பின்னர் 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டு நேற்று அதிகாலை 4 மணியளவில் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்களுள் கர்ப்பிணித்தாய் ஒருவரும், 6 பெண்களும், 3 சிறுவர்களும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## இரு தினங்களில் 3 ஆயிரம் முறைப்பாடுகள்


(கொழும்பு)

நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தை மீறிச் செயற்பட்டவர்கள் தொடர்பான 3 ஆயிரத்து 684 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவென தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவிலுள்ள முறைப்பாட்டுப் பிரிவுக்கு கடந்த 16 ஆம் திகதி 4 மணிமுதல் நேற்று முன்தினம் 17 ஆம் திகதி 4 மணிவரையிலான காலப்பகுதியிலேயே· மேற்படி முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவெனவும் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# கொரோனா பரவலை கட்டுப்படுத்த
## அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்

### ரணில் உறுதி



(கொழும்பு)

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் பட்சத்தில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாளொன்றுக்கு 5000 பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுப்பதுடன் பாடசாலைகளுக்கும் உயர்கல்வி நிறுவனங்களுக்குமாக 10 மில்லியன் முகக்கவசங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுமாத்திரமன்றி பி.பி.ஈ.சுயபாதுகாப்பு அங்கிகளை மக்களும் கொள்வனவு செய்யக்கூடிய வகையில் எமது நாட்டிலேயே அவற்றைப் பெருமளவில் உற்பத்தி செய்வதற்கும் 2000 செயற்கை சுவாசக் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுத்தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது கொரோனா வைரஸ் பரவலும் பொருளாதார நெருக்கடியுமே நாட்டில் காணப்படும் மிகப் பிரதானமான பிரச்சினைகளாகும். கொரோனா வைரஸ் இன்னும் வேகமாகப் பரவிக்கொண்டிருக்கிறது. அதனைக் கட்டுப்படுத்தாமல் நாடு என்ற வகையில் நாம் முன்னோக்கிச்செல்ல முடியாது.

அதேபோன்று மற்றொரு புறத்தில் கொவிட் - 19 பரவலால் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு எமது நாடும் முகங்கொடுத்திருக்கிறது. எனினும் அரசாங்கத்தினால் இதற்குத் தீர்வு காண முடியவில்லை. எதிர்வரும் பொதுத்தேர்தலின் ஊடாக ஆட்சியமைத்து நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே எமது மிக முக்கிய இலக்காக இருக்கிறது.

மேலும் நாமனைவரும் இலங்கையர் என்ற வகையில் ஒரே நாடாக ஒன்றிணைந்து முன்னோக்கிப் பயணிப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

அந்தவகையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது நாட்டு மக்கள், குறிப்பாக இளைஞர்கள் அதிருப்தியடைந்திருக்கிறார்கள். 225 பேரையும் தியவன்ன ஓயாவிற்குள் தள்ளவேண்டும் என்று கூறுகின்றார்கள். அவ்வாறு செய்தால் ஏற்படத்தக்க சூழல் மாசடைவைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். எனவே அதனையும் தவிர்க்கும் வகையிலேயே இம்முறைத் தேர்தலில் புதிய வேட்பாளர்களைக் களமிறக்கியிருக்கிறோம்.

எனவே நாட்டு மக்கள் நன்கு சிந்தித்து தமது வாக்குகளை அளிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஐ-2)

# வலுவான அரசாங்கத்தை ஸ்தாபிக்கும்
## சமூக ஒப்பந்த யோசனை பிரதமரிடம் கையளிப்பு



(கொழும்பு)

நவம்பர் 16 தேசிய இயக்கத்தினால் தயாரிக்கப்பட்ட வலுவான அரசாங்கத்தை ஸ்தாபிக்கும் சமூக ஒப்பந்த யோசனை நேற்று முன்தினம் அலரிமாளிகையில் பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஐபெரும் யோசனைகள் அடங்கிய இந்த ஒப்பந்தம் தொடர்பில் கருத்து வெளியிட்ட கலாநிதி குணதாச அமரசேகர, ஐந்து வருடங்களின் பின்னர் முழுமையான நாட்டு மக்களுக்காக யோசனை ஒன்றை சமர்ப்பிப்பதற்கான சூழல் ஒன்று ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இந்த யோசனை செயற்படுத்தப்படும் என்ற பாரிய நம்பிக்கையிலேயே ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டதாக கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார். (ஐ-4)

# குணமடைந்தோர் 2023

(கொழும்பு)

நாட்டில் நேற்றைய தினம் சனிக்கிழமை மேலும் 11 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களில், 7 பேர் காத்தான்குடி வைத்தியசாலையிலிருந்தும் அங்கொடை தொற்று நோய் வைத்தியசாலை, இரணவில வைத்தியசாலை, மினுவாங்கொடை இராணுவ வைத்தியசாலை மற்றும்கம்புருகமுவ வைத்தியசாலை ஆகியவற்றிலிருந்து தலா ஒருவரும் பூரண குணமடைந்து வெளியேறியுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 2023 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் 2697 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதில் 663 பேர் நாடு முழுவதும் உள்ள 9 வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் 111 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர்.

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 11 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)



# நிலத்தடி நீரின் அளவில் மிகப் பெரிய மாற்றம்

## நீரினை வீண்விரயம் செய்யாதீர்



## நீர் விநியோகம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் நீர் பெறப்படும் நிலையங்களில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக நிலத்தடி நீரின் அளவில் மிகப்பெரிய மாற்றம்ஏற்பட்டுள்ளது. அத்துடன் வரட்சி காரணமாக மக்களின் பாவனை வீதமும் அதிகரித்துள்ளது. இதனால் நீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மழையினால் உருவாக்கப்படும் நிலத்தடி நீர்நிலைகளை நம்பியே நீர் விநியோகத்திட்டம் உள்ளது. நீர்நிலைகள் அற்றுப்போகுமானால் குடிநீர் விநியோகத்தில் தடங்கல் ஏற்படும். எனவே பாவனையாளர்கள் நீரினை வீண்விரயம் செய்யாது மிகவும் சிக்கனமாக குடிநீரிற்கும் சமையற் தேவைக்கும் பயன்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும் நாளாந்த நீர் வழங்கலை மட்டுப்படுத்தி வழங்குவதற்கான முன்னாயத்த நடவடிக்கைக்காக 20.07.2020 தொடக்கம் காலை 06 மணியிலிருந்து 21.07.2020 காலை 8 மணிவரை முழுநேர நீர்த் துண்டிப்பு முன்னெடுக்கப்படுவதுடன் 21.07.2020 திகதியில் இருந்து காலை 8மணி தொடக்கம் 11 மணிவரை கரவெட்டி பிரதேசத்தின் குடிநீர் வழங்கல் இடங்களிற்கும் மற்றும் பருத்தித்துறையின் ஒரு பகுதியான வலயம் 107 (செட்டித்தெரு பூதவராயர் ஒழுங்கை, ஐயனார் கலட்டி, நாகலிங்க முதலியார் வீதி, பத்திரகாளி ஒழுங்கை, உடையார் வளவு, ஓடக்கரை) வலயம் 108 (ஓடக்கரை, சுப்பர் மடம்) ,வலயம்109 (சுப்பர் மடம், அம்மன் கோயிலடி, வியாபாரி மூலை, 1ஆம் கட்டை) வலயம் 201 (1ஆம் கட்டை சந்தி, கிராமக்கோடு, ஆத்தியடி, கந்தவுடையார் ஒழுங்கை, விநாயகர் முதலியார் ஒழுங்கை, கல்லூரி வீதி, கல்லூரி வீதி, தம்ப சிட்டி, வட்டப்பாதி, புலோலி தென்மேற்கு, கூவில், மாயக்கை, காந் தியூர், வாணர்குடியிருப்பு, கந்த முருகேசனார் வீதி, மந்திகை) வலயம் 202 (வத்தனை, பூவற்கரை, நக்கீரன்வீதி), வலயம் 203 (மகாத்மா வீதி, கந்தப்பா வளவு, பாணம்பற்றை, அல்வாய் வடக்கு, அல்வாய் முத்துமாரி அம்மன் கோயிலடி), வலயம் 204 (மனோகரா வீதி, அல்வாய், மாலுசந்தி) ஆகிய இடங்களிற் கும் மேலும் 21.07.2020 காலை 8 மணிவரை பருத்தித்துறை பிரதேசத்தின் ஏனைய குடிநீர் வழங்கல் இடங்களாகிய வலயம் 100 (புலோலி வடக்கு, விஸ்வகுல வீதி, புலோலி வட கிழக்கு, திகிரி, பல்லப்பை, மாதனை), வலயம் 101 (சவனாய், புதிய ஓடை, கலைமன்ற வீதி, அம்புலி ஓடை, பிராமண வீதி, தும்பளை வீதி, மணல் ஒழுங்கை, திகிரி ஒழுங்கை, நீலர் வளவு, கணக்கிலாவத்தை, வளலாய் ஒழுங்கை), வலயம் 103 (பிள்ளையார் கோயிலடி, லூர்து மாதா கோயிலடி, தும்பளை, கணக்கிலாவத்தை பிள்ளையார் கோயிலடி), வலயம் 104 (வெளிச்ச வீட்டு ஒழுங்கை, தும்பளை, நெல்லண்டை, லட்சுமணன் தோட்டம், மணியாரன் சந்தி), வலயம் 105 (வெளிச்ச வீட்டு ஒழுங்கை, கடற்கரை வீதி) ஆகிய இடங்களிற்கும் மேற் குறிப்பிட்ட நேர அடிப்படையில் நீர் வழங்கல் நடைபெறும்.

இந்நீர் வழங்கல் நேரமானது தொடர்ச்சியாக நாளாந்தம் மேற்கொள்ளப்படும். மேலும் நீர் வரட்சிக்கு ஏற்றவாறு வழங்கும் நாட்களில் மாற்றங்கள் ஏற்படும் என்பதனை வாடிக்கையாளர்களிற்கு தெரியப்படுத்துவதுடன் ஒத்துழைப்பு வழங்குமாறும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கேட்டுக்கொண்டுள்ளது. (4-5)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதியில் ஆட்டோ ஒன்றில் ஹெரோயின் போதைப்பொருளை கொண்டு செல்ல முயன்ற நபர் ஒருவர் கலால்வரித் திணைக்கள அதிகரிகளால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

சாவகச்சேரி மதுவரி நிலைய அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமதிமிக்க ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

இதேவேளை சந்தேக நபரை சாவகச்சேரி நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (5-8)

## பேருந்து மீது கல்வீச்சு இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றின் மீது நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் கொடிகாமம்-புத்தூர்ச்சந்திப் பகுதியில் கல்வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் பேருந்தின் நடத்துநர் உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

திருகோனமலையைச் சேர்ந்த ர.பிரசாத் மற்றும் மீசாலை கிழக்கைச் சேர்ந்த ர.லக்சன் ஆகியோரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தாக்குதல் தொடர்பான விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30)

## யாழ்.பல்கலை மாணவர்கள் மோதல் ஒருவர் படுகாயம்; ஒருவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையிலான கைகலப்பு கத்திக் குத்தில் முடிவடைந்ததில் மாணவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தமிழ் மாணவர்களுக்கு இடையிலான கைகலப்பை தடுக்க முற்பட்ட சிங்கள மாணவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் உள்ள மாணவர்கள் தங்கும் தனியார் விடுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீட தமிழ் மாணவர்கள் சிலர் கூடியிருந்த போது, அவர்களுக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது. அதில் மாணவன் ஒருவர் ஆத்திரமடைந்து மற்றொரு மாணவருக்கு கத்தியால் குத்த முற்பட்டுள்ளார்.

அதனை அவதானித்த சிங்கள மாணவர் ஒருவர் தடுக்க முற்பட்ட போது அவரது கழுத்தில் கத்திக்குத்து ஏற்பட்டுள்ளது. அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விஞ்ஞான பீட இறுதி ஆண்டு பரீட்சைகள் நடைபெறும் நிலையில் வெளிமாவட்டங்களில் இருந்து வந்து தங்கியிருந்தவர்களே இவ்வாறு கைகலப்பில் ஈடுபட்டனர்.

அவர்களுக்கு நேற்றும் பரீட்சைகள் நடைபெற்றன. சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து கத்தியால் குத்தினார் என்ற குற்றச்சாட்டில் மாணவர் ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்து யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வரும் நிலையில் 4 மாணவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-8)

## நினைவுப் பிரார்த்தனை

(குப்பிழான்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையின் முன்னாள் தலைவர் உதயசூரியரின் மறைவு குறித்த நினைவுப் பிரார்த்தனை நாளை ஞாயிற்றுக்கிழமை 19 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் முதல் சுதுமலை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (4-5-18)

## வடக்கு கடற்பரப்பில் கண்காணிப்பு தீவிரம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கடற்பரப்பில் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தியுள்ளதாக கடற்படையின் வடக்கு கட்டளைத் தலைமையகம் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 15ஆம் திகதியில் இருந்து மேலதிக கடற்படைக் கப்பல்கள், படகுகளுடன் கடற் படையினர் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர் என்றும் சந்தேகத்துக்குரிய படகுகளை சோதனையிடும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்தியாவில் வசிக்கும் இலங்கை தமிழ்அகதிகள் மூலமாகவும், போதைப்பொருள் கடத்தல்காரர்கள்மூலமாகவும்கொரோனாத் தொற்று பரவுவதை தடுக்கும் நோக்கிலேயே கடலில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக கடற்படையின் தகவல்கள் கூறுகின்றன.

கடற்படை மற்றும் விசேட அதிரடிப்படையினரால் அண்மையில் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட இந்தியர்களுடன் தொடர்புடைய கடத்தல்காரர் ஒருவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது, இந்தியாவில் உள்ள பெருமளவான தமிழர்கள் படகு மூலம் இலங்கை வருவதற்கு தயாராக இருப்பதாக தெரிய வந்துள்ளது.

இத்தகவல் கிடைத்ததை அடுத்தே, இந்தியாவில் இருந்து வருவோரைத் தடுப்பதற்காக கடற்படையினர் வடக்கு கடற்பரப்பில் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.(4-5)



இலங்கை வங்கியின் மந்திகைக் கிளையின் (இடமாற்றம் செய்யப்பட்ட) திறப்பு விழா கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது. இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் திருமதி.சுமங்கலா பிரபாகரன், தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், விருந்தினர்களாக இலங்கை வங்கியின் விற்பனை மற்றும் ஊடக வழி முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் சி.அமரசிங்க, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் வி.கமலநாதன், செயற்பாட்டு முகாமையாளர் சி.ஆனந்தராஜா, யாழ்.கிழக்கு பிரதேச முகாமையாளர் திருமதி.நித்தியா சுரேந்திரராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# விமலும் கம்மன்பிலவும் புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்து



(கொழும்பு)

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவும் பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவரான உதய கம்மன்பிலவும் புதிய ஒப்பந்தமொன்றில் நேற்று கைச்சாத்திட்டனர்.

மேற்படி இருவரும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகொள்வர் என்ற நம்பிக்கை உறுதியாக உள்ளதாகவும் அதனால் தேர்தலை வெற்றிகொண்ட பின்னர் தங்களால் மக்களுக்கு செய்ய முடியுமென வாக்குறுதி அளித்துள்ள சேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதாகவும் வாக்குறுதி அளித்தே இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இருவரும் மேற்படி வாக்குறுதிகளை நிறைவேற்றுவோமென உறுதி மொழி கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஆயிரத்து 102 தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

கடந்த மாதத்தில் சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில் ஆயிரத்து 102 தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சிறைகளில் குற்றச்செயல்கள் திட்டமிடப்படுவதையடுத்து, கடந்த சில வாரங்களாக சிறைச்சாலைகளை ஒழுங்கமைக்கும் பணிகள் நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை. AAA Gold Centre

0765684346 (C-966)

HEAT TRANSFER MACHINES
மற்றும் SUBLIMATION PRODUCTS




அனைத்து பொருட்களும் தரமான Quality சிறந்த விலையில் பெற

தமிழ், ஆங்கிலம், சிங்களம் மொழிகளில் கதைக்கலாம்.

THE MAGIC TOUCH
218, Hill Street, Dehiwela Tel: 0774242522 (C-965)


## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர் பாலசிங்கம் ராஜேந்திரக்குமார் (BOBY)

Born 30th Sept.1945
Called to rest 20th July 2019



அமரர் பாலசிங்கம் ராஜேந்திரக்குமார் (BOBY) கர்த்தரிடம் சென்றடைந்த முதலாம் ஆண்டை நினைவு கூருகின்றோம்.

"தவநிசவாசா"
அரசடி வீதி, பண்டத்தரிப்பு. குடும்பத்தினர்.

(3333)


நாடாளுமன்ற தேர்தல் 2020

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி



எங்கள் வாக்கு மாற்றத்தை ஏற்படுத்தும்

க.அருந்தவபாலன்

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி X

1 2 3 4 5 6 7 8 9 10

அருந்தவபாலன் இளைஞர் அணி

(C-063)


## காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

### காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தலைமை அலுவலக இடமாற்றம்

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது தனது தலைமை அலுவலகத்தினை இல.32 சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு 07 இல் இருந்து இல.408, காலி வீதி, கொழும்பு 03 எனும் முகவரிக்கு மாற்றியுள்ளது. எமது அலுவலகங்கள் புதிய வளாகத்தின் இழப்பீடுகளிற்கான அலுவலகத்திற்கு மேலே 3 ஆவது தளத்தில் அமைந்துள்ளன. தயவு செய்து கீழே காணப்படும் எமது புதிய தொடர்பு விபரங்களைப் காணவும்.

முகவரி : 408, 03 ஆம் மாடி, காலி வீதி, கொழும்பு 03
தொலைபேசி: 011-2301685, தொலைநகல்: 011-2301921
மின்னஞ்சல்: ompsrilanka@gmail.com

(C-963)

திகதி: 19 ஜூலை 2020

தவிசாளர்
காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்.

## இராசிபலன்

**19.07.2020**
**ஆடி 04, ஞாயிற்றுக்கிழமை**
**சதுர்த்தசி பின்னிரவு 12.11 மணிவரை**
**திருவாதிரை முன்னிரவு 10.14 மணிவரை**
**சுபநேரம் 9.01-10.31 மணிவரை**
**இராகுகாலம் 4.31-6.01 மணிவரை**
**சந்திராஷ்டமம் கேட்டை, மூலம்**

**வளவன்**

**மேஷம்** — நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள்.

**ரிஷபம்** — நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், நிதி நிலை உயர்வடையும் வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

**மிதுனம்** — வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் பயணமொன்று ஏற்படலாம்.

**கடகம்** — எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், சயன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்** — செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொன்னான நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கன்னி** — அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**துலாம்** — பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தடைகள் விலகி காரியம் கைகூடும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** — சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு** — குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** — எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும், செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**கும்பம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** — தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**உனது வார்த்தை மற்றவர் செவியில் தேன் போல பாயட்டும்**

# பிரதமரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட வங்கி ஊழியர்களின் பிரச்சினைகள்

(கொழும்பு)

அரச வங்கிகளின் தற்போதைய நிலைமை தொடர்பில் பிரகதி வங்கி ஊழியர் சங்கம் மற்றும் பிரதமருக்கு இடையில் நேற்று முன்தினம் காலை அலரிமாளிகையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

அரச வங்கி ஊழியர்களின் ஓய்வூதிய முறையின் பலன்களை அதிகரிப்பதுடன், ஓய்வூதிய பலன்களை இழந்த ஏனைய அரச வங்கிகளுக்கு ஓய்வூதியத்தை வழங்குதல் தொடர்பில் இங்கு விசேடமாக கலந்துரையாடப்பட்டது.

1996 ஆம் ஆண்டு அரச வங்கி ஊழியர்களுக்கு இழக்கப்பட்ட ஓய்வூதியம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த 2014 ஆம் ஆண்டிலேயே வங்கி ஊழியர்களுக்கு கிடைத்துள்ளது. அந்த நன்மை ஓய்வுபெற்ற வங்கி ஊழியர்களுக்கும் வங்கி ஊழியர்களின் குடும்பங்களின் வளர்ச்சி காரணமாகியதனை சுட்டிக்காட்டி பிரகதி வங்கி ஊழியர்களின் சங்கத்தின் அதிகாரிகள் அதன் நன்மை தற்போதைய காலப் பகுதியிலும் பொருத்தமான வகையில் அதிகரிப்பது ஓய்வுபெற்ற வங்கி ஊழியர்களுக்கு நிவாரணமாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், வங்கிக் கடன் வீதத்தை குறைத்தல் மற்றும் ஊழியர்களின் நலன் தொடர்பிலும் பிரகதி வங்கி ஊழியர்கள் சங்கம் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். வங்கி ஊழியர்களின் சிக்கல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி, தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பிரதமருடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட பிரகதி வங்கி ஊழியர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் ஏ.கே.பண்டார,

பிரகதி வங்கி ஊழியர் சங்கத்தின் அதிகாரிகள் மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அதில் இலங்கை அரச வங்கிகளில் காணப்படும் பிரச்சினை தொடர்பில் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டுள்ளது. மக்கள் வங்கி, இலங்கை வங்கி உட்பட அரச வங்கிகளில் உள்ள முகாமைத்துவ நெருக்கடி தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு மேலதிகமாக அரச வங்கிகளின் செயற்றிறனை அதிகரித்தல் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அரச வங்கி ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ள சில சிக்கல்கள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

பிரதமர் மிகவும் ஆர்வத்துடன் நாங்கள் முன்வைத்த கருத்துத் தொடர்பில் கவனம் செலுத்தி, பல தீர்வுகளை வழங்கினார். சில விடயங்கள் நிதி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடல் மேற்கொண்டு தீர்வு பெறுவதற்கும் ஆலோசனை வழங்கினார். (ஜ-4)



**தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குட்பட்ட கட்டுவன், மயிலிட்டி தெற்கு ஞானோதயா வித்தியாலயம் புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் தி.ஸ்ரீதரன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம்.சாள்ஸ், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், மேலதிக அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் (காணி), வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் ச. சிவஸ்ரீ ஆகியோர் கலந்து கொண்டனர். (5-8)**

# வீட்டின் மீது குண்டுத்தாக்குதல்

(மன்னார்)

மன்னார் பட்டித்தோட்டம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்டு குண்டுத் தாக்குதலின் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த வீடுள்ள பகுதிக்கு வந்த சில இளைஞர்கள் வீட்டின் வெளிப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி.கமராக்களை உடைத்த பின் நாட்டுக் குண்டு ஒன்றை வீட்டின் மீது எறிந்து விட்டு தப்பியோடினர்.

இதன்போது குறித்த குண்டு பாரிய சத்தத்துடன் வெடித்ததில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் படுகாயம் அடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(5-8-30)

# கொரோனா கட்டுப்படுத்தல் இலங்கை முன்னிலையில்

(கொழும்பு)

பெரும் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட நாடுகளையும் மிஞ்சி கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் இலங்கையும் முன்னணியில் உள்ளதென உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ராஷியா பெண்டிஷே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் தொற்று நோய் பரவல் தொடர்பான கண்காணிப்புச் செயற்பாடுகளை முன்னெடுக்க நடைமுறைப்படுத்தியுள்ள திட்டம் சாத்தியமளித்துள்ளது.

உரிய நேரத்தில் வைரஸ் பரவலை தடுப்பதற்கான செயற்பாடுகளை இலங்கை வைத்திய நிபுணர்கள் முன்னெடுத்திருந்தனர்.

பரிசோதனை, வைத்தியசாலைகளை புதிதாக நிறுவல் உள்ளிட்ட செயற்பாடுகளில் இலங்கையின் செயற்பாடு பாராட்டத்தக்க வகையில் இருக்கிறது என அவர் தெரிவித்தார். (ஜ-8)

# பொதுமக்கள் ஒத்துழைத்தால் மட்டுமே கொரோனாவை கட்டுக்குள் கொண்டு வரமுடியும்

## பவித்ரா வன்னியாராச்சி கூறுகிறார்



(கொழும்பு)

பொது மக்கள் சுகாதார ஆலோசனைகளை உரிய வகையில் பின்பற்றுவதன் ஊடாகவே, நாட்டிலிருந்து கொரோனாவை முற்றாக அழிக்க முடியும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள விசேட காணொளியிலேயே இதனைக் குறிப்பிட்டார். பவித்ரா வன்னியாராச்சி மேலும் கூறியுள்ளதாவது, "கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் கொரோனா தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கான, 3700 பி.சி.ஆர். பரிசோதனைகள் இதுவரை செய்யப்பட்டுள்ளன.

இந்த பரிசோதனைகளின் அடிப்படையில், 443 கைதிகளும் 63 அதிகாரிகளும், அவர்களுடன் தொடர்பில் இருந்த 26 பேரும் வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

அதற்கிணங்க, மொத்தமாக 530 பேரும் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். கடந்த 2 அரை மாதங்களாக நாட்டில் எந்தவொரு கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்படாமைக்கு பிரதான காரணமாக, மக்களின் ஒத்துழைப்பு தான் காணப்படுகிறது.

மக்களுக்கு நாம் மிகவும் கௌரவமளிக்கிறோம். நாம் கேட்டுக் கொண்டமைக்கு இணங்க, அனைவரும் சுகாதார ஆலோசனைகளை கடைப்பிடித்தார்கள்.

இதன் காரணமாக சமூகத் தொற்றாக இந்த வைரஸ் பரவல் காணப்படவில்லை. இப்போது, கந்தகாடு மத்திய நிலையத்தின் ஊடாக இந்த விடயத்தில் சற்று பின்னடைவொன்று ஏற்பட்டுள்ளது.

இவ்வேளையில் நாம் மக்களிடம் ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறோம். அதாவது, கடந்த காலங்களில் எமக்கு எவ்வாறு ஒத்துழைப்பு வழங்கினீர்களோ அதேபோல், இனியும் செயற்பட்டு அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இது இன்று உலகளாவிய ரீதியான சவாலாக காணப்படுகிறது. எனினும், இதனை எம்மால் கட்டுப்படுத்த முடியும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

மக்கள் எமக்கான ஒத்துழைப்பை வழங்கினால் மட்டும் தான் இதிலிருந்து நாம் மீண்டு வர முடியும்" எனஅவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-2)

## கதிர்காமம் புனித பூமிக்கு பொதுமக்கள் வருவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

கொவிட்-19 தொற்று காரணமாக சுகாதார பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு கதிர்காம புனித பூமிக்கு பொது மக்கள் வருவது நாளை மறுதினம் 21 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மொனராகலை மாவட்ட செயலாளர் இதனை தெரிவித்துள்ளார். ஆடி வேல் விழாவில் பெரஹர நடைபெறும் முழுமையான காலஎல்லை மக்களுக்கு பார்வையிடுவதற்கோ கலந்து கொள்வதற்கோ சந்தர்ப்பம் வழங்கப்படாது எனவும் மொனராகலை மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 ஒழிப்பிற்கு ஒத்துழைப்பு வழங்கி சுகாதாரப் பிரிவின் வழிகாட்டி ஆலோசனைகளுக்கு அமைவாக மத அனுஷ்டானங்களுக்கு மாத்திரம் முக்கியத்துவம் வழங்கி இம்முறை கதிர்காமம் புனித திருத்தலத்தின் வருடாந்த ஆடி வேல் விழாவை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



# யாழில் விடுவிக்கப்பட்ட காணிகளில் குறைந்தளவே பாவனையில் உள்ளது

## இராணுவத் தளபதி குறைபட்டதாக ஆளுநர் தெரிவிப்பு

(குப்பிழான்)

**வெளிநாடுகளில் வசிப்போர் இங்கு திரும்பி வந்து குடியமர்வதில் ஆர்வம் காட்டாவிட்டாலும் காணிகள் விடுவிக்கப்பட்டதும் அவற்றை மீளப் புனரமைத்து யாரிடமாவது பொறுப்பளிப்பதிலாவது ஆர்வம் காட்ட வேண்டும் என வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.**



வயாவிளான் றோ.க.த.க. பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மேற்படி கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பழைமையும் புகழும் மிக்க வயாவிளான் கிராமம் இடப்பெயர்வுக்குப் பின்னர் சீரழிந்து போய் தன்னைத்தான் தலை நிமிர்த்திக் கொள்ள முடியாத நிலையிலிருக்கிறது. பல தடவைகள் முயற்சித்த போதும் பல பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர முடியாத நிலையும் காணப்படுகிறது. வடமாகாண ஆளுநராகப் பொறுப்பேற்பதற்கு முன்னரே இது சம்பந்தமாக நான் இராணுவத் தளபதிகளுடன் கலந்துரையாடிய போது, "நாங்கள் யாழில் எட்டாயிரம் ஏக்கர் காணிகளை விடுவித்துள்ளோம்.

ஆனால், நான்காயிரம் ஏக்கர் காணி மாத்திரம் தான் பயன்படுத்தப்படுகின்றது. மீதி நான்காயிரம் ஏக்கர் காணிகள் மக்களால் பயன்படுத்தப்படவில்லை எனவும் ஆகவே, காணிகளை மீளவும் ஒப்படைப்பதில் எந்தவித அர்த்தமுமில்லை என இராணுவத் தளபதி என்னிடம் குறையாகக் கூறினார்.

நாங்கள் காணிகளை விடுவித்தாலும் மக்கள் மீளக்குடியமரவில்லை. குறிப்பாகப் பெரும்பாலானோர் வெளிநாடுகளில் வசிப்பதால் அவர்களுக்கு மீளக்குடியேறுவதில் ஆர்வமில்லாமையால் காணிகளை விடுவிப்பதில் பிரயோசனமில்லை என அவர்கள் மீண்டும் மீண்டும் என்னிடம் தெரிவித்திருந்தார்கள்.

எனினும், நான் முயற்சிகளைக் கைவிடவில்லை. வயாவிளானில் மீண்டும் மக்கள் அனைவரும் குடியேறி நிம்மதியாக வாழ வேண்டுமென நாங்கள் விரும்புகின்றோம்.

இந்தப் பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாகவுள்ள மீளக்குடியமர்வு விடயத்தில் நானும், என் அதிகாரிகளும் மீண்டும் மீண்டும் முயற்சிகள் செய்வோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-5-18)

# தேர்தலின் கடமைகளில் 795 வாகனங்கள்

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலில் யாழ். மாவட்ட தேர்தல் கடமைகளுக்காக 795 வாகனங்கள் போக்குவரத்துக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத்தின் தேர்தல் வாகனப்பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன. தேர்தல் நடவடிக்கைகளுக்காக 508 வாக்குச் சாவடிகள் மற்றும் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள விசேட பிரிவுகளுக்காக 795 வாகனங்களும் பயன்படுத்தப்படவுள்ளன.

இதற்கென யாழ்.மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களுக்குச் சொந்தமான 145 வாகனங்களும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான 53 பேருந்துகளும் 120 தனியார் பேருந்துகள் உள்ளடங்கலாக மொத்தம் 795 வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 3 ஆம் திகதி திணைக்களங்களிலிருந்து பெறப்படும் வாகனங்கள் அனைத்தும் பொறுப்பேற்கப்பட்டு மீண்டும் 6 ஆம் திகதி காலை மீளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன. (5-8)

# 16 கிராம் ஹெரோயினுடன் இளைஞன் கைது

(நெளுக்குளம்)

வவுனியா காத்தார்சின்னக்குளம் பகுதியில் 16 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில்வைத்திருந்த இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளதாக வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

வவுனியா காத்தார்சின்னக்குளம் பகுதியில் போதைப் பொருள் வியாபாராம் முன்னெடுக்கப்படுவதாக போதை ஒழிப்புப் பிரிவினருக்கு இராணுவத்தினரால் தகவல் வழங்கப்பட்டது.

அதன் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் அதே பகுதியை சேர்ந்த இளைஞனை கைது செய்துள்ளனர்.

அவரிடமிருந்து 16 கிராம் 40 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட இளைஞன் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-5-299)



கிளிநொச்சி இரணைமடுப்பகுதியில் இராணுவ ஆதார வைத்தியசாலையை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா திறந்து வைத்தார். இத்திறப்பு விழாவில் மேஜர் ஜெனரல் குணரத்தின, கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் சரவணபவன், கிளிநொச்சிமாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் கே.ராகுலன், இராணுவ உயரதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
(படங்கள்:-அக்கராயன், முறிகண்டி செய்தியாளர்கள்)

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு டிப்பர்களுடன் அதன் சாரதிகள் இருவரும் நேற்று தருமபுர பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவருக்கும் சட்ட விரோத மணல் அகழ்வினை நிறுத்தும்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டதுடன் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (4-5-316)

# அப்புறப்படுத்தப்பட்டது எழுதாரகை

(அனலைதீவு)

அனலைதீவு இறங்குதுறையில் தரித்து நிறுத்தப்பட்டுள்ள எழுதாரகை படகை அப்புறப்படுத்துவதற்கு கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் வடக்கு மாகாண சபையினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட குறித்த படகு நீண்டகாலமாக சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட நிலையில் அனலைதீவு இறங்குதுறையில் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை



எதிர்கொள்வதுடன், சிலருக்கு கால் முறிவு போன்ற காயங்களும் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று அனலைதீவு பிரதேசத்திற்கு வருகை தந்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம், குறித்த படகை அப்புறப்படுத்தி தருமாறு பிரதேச மக்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட அமைச்சர், மக்களுக்கு அசௌகரியத்தினை ஏற்படுத்தும் குறித்த படகினை உடனடியாக அப்புறப்படுத்தி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு தெரிவித்துள்ளார். (5-4)

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

அதுசரி, தேர்தல் திருவிழா எப்படி இருக்குதாம் விதானையார் விசுவலிங்கம் கேள்வி எழுப்பினார்.

தேர்தல் களத்தில இறங்கி நிற்கிறவியள் ஓடித்திரியினம். ஆனால் எங்கட சனங்களுக்குத் தேர்தலில எந்தவித அக்கறையும் இல்லை. மூப்பர் அதிரடியாகப் பதிலளித்தார்.

மூப்பரின் பதிலோடு ஆலடியில நிசப்தம் நிலவியது. நிசப்தத்தைக் கலைக்கப் பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

என்ன இருந்தாலும் பொதுமக்கள் தேர்தல் தொடர்பில விழிப்பாக இருக்க வேணும். இல்லையெண்டால் எங்கட அரசியல் அஸ்தமனமாகிப் போய்விடும்.

பண்டிதர் இவ்வாறு கூறியதும் கங்காணி கார்த்திகேயன் கோபமுற்றவராக எழுந்தார்.

தமிழ் இனத்திற்காகத் தங்கட உயிரையே கொடுக்கிற அளவிலதான் எங்கட மக்கள் இருக்கினம். ஆனால் தமிழ் அரசியல்வாதிகளின்ர பொறுப்பற்ற செயல்களாலும் தமிழ் மக்களை ஏமாற்றுறதாலும் அரசியல் எண்டாலே வேண்டாம் எண்டு எங்கட மக்கள் வெறுக்குமளவுக்கு வந்து விட்டினம்.

உண்மையில எங்கட மக்களை அரசியலில இருந்து அந்நியப்படுத்தினதில பெரும் பங்கு தமிழ் அரசியல்வாதிகளுக்குத்தான் உண்டு.

சிறாப்பர்: எங்கட மக்கள் அமைதியாக இருக்கினம். அதற்காக அவர்கள் அரசியலில இருந்து ஒதுங்கிவிட்டினம் எண்டு நினைக்கக்கூடாது.

அவர்கள் சரியான நேரத்தில சரியான பதிலை வழங்குவினம்.

சாத்திரியார்: உண்மைதான். அண்மையில வடமராட்சி உடுப்பிட்டிப் பகுதியில நீதியரசர் விக்னேஸ்வரன் ஐயாவின்ர கட்சிக் கூட்டம் நடந்தது. வேட்பாளர்கள் பேசி முடிந்த பின்னர் அந்தக் கூட்டத்தில கலந்து கொண்டிருந்த பெரியவர் ஒருவர் எழுந்தார்.

தவத்திரு யோகர் சுவாமிகளிட்ட சென்ற சிலர், தமிழ் மக்களின்ர பிரச்சினை தொடர்பில சுவாமிகளிட்ட கேட்டவியளாம்.



## நல்லூரில புத்தர் சிலை வைக்க சிலர் ஓடித்திரிகினமாம்

அப்போது தவத்திரு யோகர் சுவாமிகள் கண்ணீர் விட்டு அழுதவராம்.

ஒரு பத்து நிமிடம் மௌனமாக இருந்துவிட்டு, வெள்ளைத் தலைமுடி தாடியோட ஒரு நீதிமான் வருவார். அவரின்ர காலத்தில தமிழ் மக்களின்ர பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் எண்டு சொன்னவராம்.

தவத்திரு யோகர் சுவாமிகள் சொன்ன அந்த நீதிமான் விக்னேஸ்வரன் ஐயா எண்டுதான் நான் நம்புகிறன்.

இப்படி அந்தப் பெரியவர் அங்கு கூறிய போது பலரும் நெகிழ்ந்து போயிற்றினம். கரகோசம் பலமாக ஒலித்தது.

இதை நான் சொல்லுறது ஆன்மீகபலம் கொண்ட அரசியல் பற்றி நாம் சிந்திக்க வேண்டியிருக்குது என்பதற்காகத்தான். கடவுளுக்குப் பயப்படாதவர்கள், நீதிக்கும் தர்மத்திற்கும் அஞ்சாதவர்களால நேர்மையான அரசியலைத் தந்துவிட முடியாது என்பதுதான் என்ர கருத்து.

வாத்தியார்: சாத்திரியார் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. இண்டைக்கு சில அரசியல் கட்சிகளுக்குள்ள நடக்கிற குத்துவெட்டுக்களைப் பார்க்கிறபோது, எப்படி எங்களிட்ட ஒற்றுமை ஏற்பட முடியும். ஒரு கட்சிக்குள்ளேயே நினைத்துப் பார்க்க முடியாதளவில் கழுத்தறுப்புகள் நடக்கிறது எண்டால், எங்கட நிலைமை எப்படி எண்டு பாருங்களன்.

மூப்பர்: எதிலும் நேர்மை இருக்கவேணும் பாருங்க. நேர்மை இல்லை எண்டால் எல்லாமுமே பிரச்சினைதான்.

கங்காணி: இந்தாப் பாருங்க, திருக்கோணேச்சரம் தங்கட எண்டு ஒரு புத்தபிக்கு சொல்லுறார் எண்டால், அவர்களின்ர மனநிலை எப்படி என்பது தெரியுதுதானே.

பண்டிதர்: கங்காணியார் சொல்லத்தான் ஞாபகம் வருகுது. நல்லூர்ப் பகுதியில புத்தர் சிலையைப் பிரதிஷ்டை செய்யிற முயற்சியில பௌத்த பிக்கு ஒருவர் கடுமையாக ஈடுபட்டுள்ளாராம். அதிலும் நல்லூர்க்கந்தப் பெருமானின் கோயிலுக்கு அண்மையில புத்தர் சிலை வைக்க வேணும் என்பதுதான் அவர்களின் முயற்சி எண்டும் அறியமுடியுது.

சிறாப்பர்: பார்த்தியளோ கதிர்காமக் கந்தனை கோயிலை விகாரையாக்கிப் போட்டினம். முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் கோயில் தங்கட பழைய விகாரை எண்டு சொல்லுகினம். கன்னியா வெந்நீரூற்றைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கினம்.

இப்ப நல்லூர் ஆலயச் சூழலில புத்தர்சிலை வைக்கவும் முயற்சிக்கினம் எண்டால், தமிழ்மக்களின் பூர்வீகம் எப்படிப் பறிக்கப்படுகிறது என்பது தெரியுதுதானே.

சாத்திரியார்: தமிழ் மக்களுக்கு எப்பவும் வில்லங்கம் செய்ய வேணும் என்பதுதான் சிங்களப் பேரினவாதத்தின் நிலைப்பாடு. இவற்றுக்கெல்லாம் எண்டைக்கோ ஒரு தீர்ப்பு வந்துதான் ஆகும்.

விதானையார்: சாத்திரியார் நீங்கள் இப்படிச் சொல்லுறியள். ஆனால் அவையள் தனிநாடு கேட்ட தமிழ்மக்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறுக்கிக்கொண்டுவந்து இப்ப கோணேச்சரமும் தங்கட எண்டு சொல்லத் தலைப்பட்டிருக்கினம்.

வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் எண்டு நாங்கள் சொல்லுறம். இதை மீறி எவனும் எதுவும் கதைக்க முடியாது எண்ட நிலைப்பாட்டில நாங்கள் உறுதியாக இருந்தால் எல்லாம் சரியா வரும்.

இப்படி விதானையார் கூற, அந்நேரம் பார்த்து பண்டிதர் தான் கொண்டு வந்திருந்த பனங்காய்ப் பணியாரத்தை எல்லோருக்கும் கொடுத்தார். அவர்கள் அதை வாங்கிச் சாப்பிட்டனர்.

என்ன பண்டிதர் எண்ணெய் கொஞ்சம் பழசாகிப் போயிற்றுது போல எண்டார் கங்காணியார். எண்ணெய் பழையதல்ல புதிய மரக்கறி எண்ணெய்தான். ஆனால் இப்ப வாற மரக்கறி எண்ணெயில நுரைக்கிற ஒரு தன்மை இருக்குது. ஏற்கனவே பயன்படுத்தப்பட்டதோ என்றுகூட நான் சந்தேகித்தனான். பண்டிதர் பரமலிங்கத்தார் விளக்கம் கொடுத்தார்.

பண்டிதர் சொல்லுறது உண்மைதான். நானும் வாங்கின மரக்கறி ஒயிலில நுரைத்தன்மை இருக்கத்தான் செய்யுது என்றார் சாத்திரியார். அப்ப மரக்கறி எண்ணெய் தொடர்பில ஒரு சோதனையைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் நடத்த வேணும் என்ற தீர்மானத்தை மாநாட்டுத் தலைவர் வாத்தியார் அறிவிக்க, அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# நிழல் அரசு!

## யஸ்மின் சூகா எச்சரிக்கை





இலங்கையில் ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்டுள்ள செயலணிகள், சமாந்தரமான ஒரு அரசு உருவாக்கப்படும் ஆபத்தைக் கொண்டிருப்பதாக, கடந்தவாரம் ஒரு அறிக்கையின் மூலம் எச்சரிக்கை விடுத்திருந்தார். ஐ.நாவின் முன்னாள் விசேட நிபுணரான யஸ்மின் சூகா.

தென்னாபிரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும், உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டம் என்ற, அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளராக உள்ள, யஸ்மின் சூகா வெளியிட்டுள்ள இந்த எச்சரிக்கை, முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

அவர் இங்கு சமாந்தரமான அரசு என்று குறிப்பிட்டிருப்பது, ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்துக்கு இணையான, ஒரு நிழல் ஆட்சியைத்தான்.

ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்டுள்ள செயலணிகள், அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் அமைக்கப்பட்டவை அல்ல.

ஜனாதிபதியின் அதிகாரத்தைக் கொண்டு, வேறெந்தச் சட்டங்களாலும் கட்டுப்படுத்த முடியாத வகையில், உருவாக்கப்பட்டுள்ள இந்த செயலணிக்கு, பரந்த அளவில் அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளதாக யஸ்மின் சூகா சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இலங்கையைப் பொறுத்த வரையில், சமாந்தரமான அரசு என்பது புதியதொரு விடயமல்ல. விடுதலைப் புலிகளின் காலத்தில், வடக்கிலும் கிழக்கின் சில பகுதிகளிலும், அவர்களின் நிர்வாகமே, காணப்பட்டது.

தனியரசுக்கான கட்டுமானங்களுடன், புலிகள், சமாந்தரமான அரசு ஒன்றை கட்டியெழுப்பி வந்தனர்.

ஆனால் தெற்கில், அவ்வாறான சமாந்தர அரசு முன்னெப்போதும் இருந்ததில்லை. பிரித்தானியாவின் வெஸ்ட் மினிஸ்டர் ஆட்சி முறையை பின்பற்றும் இலங்கையின் ஜனநாயகத்தில், அங்குள்ளதைப் போன்று, நிழல் அமைச்சரவைக்குக்கூட இடம் இருக்கவில்லை.

ஆனால் இப்போது, இராணுவ ஆதிக்கம் அதிகமுள்ள செயலணிகளின் மூலம், சமாந்தரமான அரசு உருவாக்கப்படும் ஆபத்து இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருக்கிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வுந்தது தொடக்கம், தமது நிர்வாகத்தில் இராணுவ அதிகாரிகளையே முன்னிலைப்படுத்தி வருகிறார்.

கோட்டாபய ராஜபக்ஷ தனது நிர்வாகத்தில் மூன்றில் இரண்டு பகுதியை இராணுவ அதிகாரிகளிடமும், தனது குடும்பத்தினரிடமுமே கொடுத்திருக்கிறார் என்று, கடந்த புதன்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பில், முன்னாள் இராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக குறிப்பிட்டார்.

அவ்வாறாயின் ஏனையவர்களுக்கு இடம் எங்கே? என்றும் தயான் ஜயதிலக கேள்வி எழுப்பியிருந்தார்.

தற்போதைய அரசாங்கம், மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த நிலையை விடவும் மோசமான நிலைக்குச் சென்று விட்டதாக அவர் குறிப்பிட்டதுடன், இது இலங்கையை சர்வதேச ரீதியாக மேலும் தனிமைப்படுத்தும் என்றும் எச்சரித்துள்ளார்.

ஆனால், சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தை முன்னிலைப்படுத்தும் போக்கிலிருந்து, விடுபடுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோ, அவரது அரசாங்கமோ தயாராக இல்லை.

இராணுவப் பின்புலத்துடன் கூடிய ஒரு ஆட்சியை நிறுவுவதன் மூலம், தம்மைப் பலப்படுத்திக்கொள்ள முடியும் என்று அவர் நம்புகிறார்.

அதனை மையப்படுத்தியே எல்லாச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒரு பக்கத்தில் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடுகள் மேலோங்கியுள்ள சூழலில், மற்றொரு புறத்தில் வடக்கு, கிழக்கில் இராணுவ அதிகாரம் விரிவாக்கப்பட்டு வருகிறது.

கொரோனாத் தொற்று தடுப்பு நடவடிக்கைகளை சாட்டாகக் கொண்டு, முகாம்களை விட்டு வெளியே கொண்டு வரப்பட்ட இராணுவத்தினர், இப்போது, வீதிக்கு வீதி, சந்திக்குச் சந்தி நிறுத்தப்படும் நிலை தோன்றியிருக்கிறது, அல்லது தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, வடக்கில் கடந்த பல வாரங்களாகவே பல்வேறு சம்பவங்கள், நிகழ்வுகளை வைத்துக் கொண்டு, அன்றாடச் செயற்பாடுகளில் இராணுவத் தலையீடுகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

சுற்றிவளைப்புக்கள், தேடுதல் வேட்டைகள், பல இடங்களில் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளை நியாயப்படுத்திக் கொள்ளும் வகையிலான, சில சம்பவங்களும் நடந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

அத்தகைய சம்பவங்கள் எத்தகைய பின்னணியில் நடந்து கொண்டிருக்கின்றன என்ற சந்தேகங்களும் மக்கள் மத்தியில் இருக்கிறது.

இவற்றைச் சாட்டாக வைத்து, 25 இற்கும் அதிகமானோர் அண்மைக்





காலங்களில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

வடக்கைப் பொறுத்தவரை, போருக்குப் பின்னர், மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் எவ்வாறான இறுக்கமான ஒரு இராணுவ நெருக்குவாரம் கொண்ட சூழல் காணப்பட்டதோ அதை ஒத்த நிலைக்குச் சென்று விட்டதாகவே தெரிகிறது.

இது மிகநுட்பமாக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற ஒரு நகர்வாகவே நோக்கப்படுகிறது.

வடக்கில் தோற்றுவிக்கப்பட்டு வரும் இந்த இர்ராணுவ நெருக்குவாரம், அடுத்த மாதம் நடக்கவுள்ள தேர்தலிலும் தாக்கங்களைச் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் கரும்புலிகள் தினமான, கடந்த ஜுலை 5ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகங்கள் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் கூட, வடக்கு- கிழக்கில் தேர்தல் விவகாரங்களில் இராணுத்தினர் தலையீடு செய்வதாகவும், இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதியிடமும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிடமும் கோரியிருந்தார்.எனினும், இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா அதனை நிராகரித்திருக்கிறார்.

தமிழ் அரசியல்வாதிகள் இராணுவத்தினர் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்துவதாக அவர் கூறியிருக்கிறார்.

தேர்தலில் இராணுவத்தினர் நேரடியாகத் தலையீடு செய்கின்றனர் என்ற குற்றச்சாட்டுகளை அவர் நிராகரித்தாலும், வடக்கின் தற்போதைய பாதுகாப்பு நடைமுறைகள், தேர்தலில் மறைமுகத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை நிராகரிக்க முடியாது.

ஏற்கனவே, கொரோனாத் தொற்று மக்களை அச்சுறுத்தி வருகிறது. அதனைச் சார்ந்த சுகாதார வழிமுறைகளின் படி வாக்களிக்க, வாக்காளர்கள் எந்தளவுக்கு முன்வருவார்களா? என்ற சந்தேகம் உள்ளது.

தேர்தல்கள் ஒழுங்காகவும் நியாயமாகவும், அமைதியான முறையில், அச்சுறுத்தல் இல்லாத சூழலிலும், நடக்க வேண்டும்.

வாக்காளர்கள் இயல்பாக வாக்களிக்க வர வேண்டும். 2015இற்குப் பின்னர் நடந்த தேர்தல்களில் வடக்கில் அதிகபட்ச வாக்குகள் பதிவாகின.

இம்முறை பொதுத் தேர்தலில் வாக்களிப்பு வீதம் குறையுமாக இருந்தால் அது நெருக்குவாரங்களினால்தான் குறைந்ததாகக் கருதப்படும். அத்தகைய தொரு நிலை அரசாங்கத்துக்குப் பாதகமாகவே அமையும்.

**சுபத்ரா**









**வியாசரே தமிழ் சமூகத்திற்கு நீர் என்ன சொல்ல விரும்புகிறீர்?**

**தரன் — பருத்தித்துறை**

### கொரோனா அச்சமின்றி சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாது நடப்பவர்களை என்ன செய்ய வியாசரே?

உலக வல்லரசு நாடுகளையே அலறவிட்டுக் கொண்டிருக்கிறது கொரோனா.

எதற்கும் அஞ்சாத அமெரிக்காகூட கொரோனாவில் இருந்து எமது மக்களைக் காக்க உதவுங்கள் எனக் கோரிக்கை விடுகிறது.

ஆனால் இங்கு எம்மவர் சிலர் கொரோனா என்பது வெறும் பூச்சாண்டி என மூக்குக்கும் வாய்க்கும் போட வேண்டிய மாஸ்க்கை நாடிக்குப்போட்டு அலைகிறார்கள்.

கைகழுவச் சொன்னால் வீட்டில் கழுவிவிட்டுத்தான் வந்தேன் என விசும்பு பேசுகிறார்கள்.

சமூக இடைவெளி என்றால் அது எதற்கு என்று சவால் விடுகிறார்கள்.

**சிவன் — வதிரி**

### தொடர்ந்தும் ஆட்சியாளர்கள் எம்மை ஏமாற்றிக்கொண்டே இருக்கிறார்களே?

ஏமாறுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவனும் இருந்துகொண்டே இருப்பான். இதுதான் வாழ்வின் தத்துவம்.

என்ன செய்ய, தமிழினத்திற்குக் கிடைக்கும் தலைமைகள் காலம் காலமாக ஒவ்வொரு அரசையும் நம்பி சர்வதேசம் எனும் புருசனை கைவிட்டு விடுகிறார்கள்.

இறுதியில் அரசன் கைவிரிக்க புருசனிடம் ஓடோடி பயனேதும் கிடையாது தானே.

எல்லாம் விதி. ஆனாலும் இந்த விதியை மாற்ற இம்முறை தேர்தலை பயன்படுத்துவோம்.

புதிய ஒரு ஆளுமையுள்ள தலைமையிடம் எம்மை ஒப்படைப்போம்.

மாற்றம் ஒன்றே மாறாதது. இதை மறக்க வேண்டாம்.

**சுதன் — குப்பிழான்**

### இம்முறை மாவீரர் நாள் கனவில் கூட கொண்டாட முடியாது போல?

ஓ...தம்பிக்கு அந்த நினைப்பெல்லாம் இருக்கோ. தம்பிக்கு ஒரு குட்டிக்கதை

முன்பொரு காலத்திலை அவைக்கு கண்ணும் கையும் கட்டப்பட்டிருந்தது.

அப்ப நாங்கள் செய்யுறதும் தெரியா, யார் செய்யுறதெண்டும் தெரியா.

இப்ப அவைக்கு கை மட்டும்தான் கட்டிக் கிடக்கு. கண் நல்லாத் தெரியுது.

கைக்கட்டு அவிழ்த்தா நம் நிலையைக் கொஞ்சம் நினைச்சுப் பார் ராசா.

**சீனா — மந்துவில்**

### தேர்தலில் போட்டியிடும் எல்லோரும் வெல்வோம் என்கிறார்களே?

இப்பேற்பட்ட அபார நம்பிக்கை அவர்களுக்கு எங்கிருந்து வருகின்றது என்பதுதான் எமக்கும் புரியாத புதிர்.

எந்தக்கட்சி பிரமுகர்களுடன் பேசினாலும் "எமக்கு ஒரு சீற் உறுதி. இன்னும் கொஞ்சம் முயற்சித்தால் இரண்டாவது சீற்றையும் பெற்று விடலாம்'' என்கிறார்கள்.

வீட்டுக்கு வருபவரை வரவேற்று அன்பாய் உபசரிப்பது தமிழர் வழமை. இதைமறந்து எல்லோரும் பிதற்றினால் யார் என்ன செய்ய?

இறுதியில் விருப்பு வாக்கில் இரட்டை இலக்கத்தைக் கூட தாண்டாத நிலை வரும்போதே பிறக்கும் சுடலை ஞானம்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

**கேதீஸ் — கீரிமலை**

### யாழ்.தபாலகத்தில் தமிழில் எழுதிய சிட்டைக்காக 30 நிமிடம் ஒருவர் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதே?

தொழில்நுட்பத்தின் உச்சியில் இருக்கும் ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் தயாரிக்கப்பட்ட பொருட்களை கையாளுவதற்கான ''வழிகாட்டி புத்தகம் (கற்லொகி)'' அவர்களின் சொந்த மொழியிலேயே அச்சிடப்பட்டுள்ளன.

இதனால் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் தமது மாணவர்களை அந்நாட்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி ஜப்பான், சீனா மொழிகளைப் படிக்க வைக்கிறார்கள்.

ஆனால் இங்கு ஒரு கடிதத் தலைப்பில்கூட எமது தாய்த்தமிழைப் புறக்கணித்து ஆங்கிலம், சிங்களத்தில் எழுதி புளகாங்கிதம் அடைகிறார்கள்.

இப்படியே போனால் வெல்லத் தமிழ் எப்படி வெல்லும்.

**மீரா — சாவகச்சேரி**

### தாய், தந்தையின் மதிப்புத் தெரியாத பிள்ளை களை என்ன சொல்ல?

இந்த உலகில் இப்பேர்ப்பட்ட கொடுமைகளும் நிகழ்கிறதோ என்ற எண்ணம் தாய், தந்தையரை முதியோர் இல்லங்களில் விட்டுவிட்டு தாம் தமது வீட்டில் உல்லாசமாக இருக்கும் பிள்ளைகளைப் பார்க்கும் போது பொங்கி எழும்.

வயித்தில் நீ உதைக்க அந்த வலி மறந்து உன் உதையின் உணர்வறிந்து பூரிப்படைந்த உன் தாயை,

திருவிழாவில் சனக் கூட்டத்தில் சாமி தெரியவில்லை என நீ அழ தன் தோளில் உன்னைத் தூக்கி வைத்து சாமியைக் காட்டிய அந்தச் சாமியை அநாதை இல்லத்தில் விடுவாயானால் நரகம் என்பது உனக்கு நிச்சயம்.

**யாழ்.தபாலகத்தில் தமிழில் எழுதிய சிட்டைக்காக 30 நிமிடம் ஒருவர் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதே?**

**நேதாஜி — வதிரி**

### அரசியல் மேடைகளில் வேட்பாளர்கள் தம்மைப்பற்றியும் தமது திட்டம் பற்றியும் பேசாமல் கூட்டமைப்பைப் பற்றியே பேசுகிறார்களே?

தமிழ் மக்கள் விடயத்தில் கூட்டமைப்பு சரியாக நடந்து கொள்ளுமாக இருந்தால் இன்று வடக்கு-கிழக்கில் இத்தனை கட்சிகளும் இத்தனை சுயேட்சைக் குழுக்களும் களம் இறங்கியிருக்காது.

செய்ய வேண்டியதை செய்ய வேண்டிய நேரத்தில் தவறவிட்டு விட்டு இப்போதும் இன்னொரு சந்தர்ப்பம் தாருங்கள் என்று சொல்பவர்களை விமர்சிக்காமல் வேறு என்ன செய்ய?

**தமிழ் — யாழ்ப்பாணம்**

### கண்டதும் காதல் என்பதை ஏற்க முடியுமா உம்மால்?

எனக்குத் தெரிந்த ஒருவரின் மகன் ஒரு பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து எங்கேயோ கொண்டு போய் விட்டார்.

வீட்டில் உள்ளவர்கள் பதறி அடித்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது நான் ஒரு பெண்ணை விரும்பினேன்.

அவரைத் திருமணம் செய்து விட்டேன். தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என பதில் கூறியுள்ளார்.

விசாரித்துப் பார்த்ததில் மூன்று நாள் காதல் எனத் தெரிய வந்தது.

ஒரு விநாடி என்றாலும் காதல் காதல்தானே.

**தவம் — இருபாலை**

### வியாசரே தமிழ் சமூகத்திற்கு நீர் என்ன சொல்ல விரும்புகிறீர்?

என் அன்பார்ந்த, அறிவார்ந்த தமிழ் சமூகமே! இப்போது கொரோனாவின் பயப்பீதியின் மத்தியிலும் அரசாங்கம் தேர்தலை நடத்தியே ஆக வேண்டும் என நினைக்கின்றது.

இந்தத் தேர்தலை தமிழர்களாகிய நாம் பயன்படுத்த வேண்டும்.

எம்மை ஏமாற்றி தம்மை வளப்படுத்தியவருக்கு தகுந்த பாடம் கற்பிக்கும் நேரம் இது.

மாற்றத்திற்கான எமது வாக்கை கண்டிப்பாக இடுவோம். எம் இனத்தின் உரிமைகளைப் பெற்றுத் தருவதாக வாக்குக் கூறி அரசுடன் இணைந்து ஆட்டம் ஆடியவர்களுக்கு நாம் வாக்குகளால் அடிப்போம். அதற்காய் தவறாது வாக்களிப்போம்.

# இந்தியாவை நெருங்கும் சீனக்கடற்படை

**இலங்கை -சீனா பன்முனை உறவுகள் பெருமளவில் வளர்ந்துள்ளன. முக்கியமாக, மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் இலங்கையின் பாதுகாப்பைத் தவிர, அரசியல், பொருளாதாரம் மற்றும் வளர்ச்சிப் பணிகளிலும் சீனாவின் பங்கு அதிகமாயிற்று.**

**-கேணல் ஆர். ஹரிகரன்-**



இந்தியாவின் வட கோடியில் உள்ள, லடாக் எல்லையில், நான்கு இடங்களில் குவிக்கப்பட்டிருந்த சீன இராணுவப் படைகள் விலக்கிக் கொள்ளப்படும் என வந்துள்ள செய்தி வரவேற்கத்தக்கது.

அது, சீனாவுடன் போர் மூளும் அபாயத்தை தற்காலிமாக தவிர்த்தாலும், இரு நாடுகளுக்கும் இடையே உள்ள எல்லைப் பிரச்சினைகள் இன்னும் தீரவில்லை என்பது தான் உண்மை. ஆகவே நாம் விழிப்புடன் செயற்படுவது அவசியம். இந்திய கடல் எல்லைக்குள் அவ்வப்போது, சீனக் கப்பல்கள், அந்நாட்டின் போர்க்கப்பல்கள், ஆராய்ச்சி மற்றும் மீன்பிடிப் படகுகள் ஊடுருவி, கடற்படையின் தயார் நிலையை அடிக்கடி சோதித்து வருகின்றன. இது, பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய சங்கதி.

இந்தியாவின் கடற்கரை, 7,516 கி.மீ. இதில் தீவுப்பகுதிகளான அந்தமான் நிகோபார் மற்றும் இலட்சத்தீவுகள் ஆகியவற்றின், 2,054 கி.மீ. கடற்கரையும் அடங்கும். சர்வதேச ஒப்பந்தப்படி, இந்தியாவின் கடல் எல்லையை ஒட்டிய, 2,172 மில்லியன் சதுர கி.மீ. கடற்பரப்பில் உள்ள கடல் வளத்துக்கும், கடலின் அடியில் உள்ள கனிமங்களுக்கும் இந்தியாவுக்கு முன்னுரிமை உண்டு. ஆகவே, கடல் வழியே தீவுப்பகுதிகள் உள்ளிட்ட நாட்டின் பாதுகாப்புக்கு உண்டாகும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவும், இந்தியாவுக்குச் சொந்தமான கடல் வளங்களின் பாதுகாப்பதும் கடற்படை மற்றும் கடலோரக் காவல்படைகளின் கடமையாகும்.


### சீனாவுடன் ஒப்பந்தங்கள்

இந்தியாவின் கடல் எல்லையைச் சுற்றியுள்ள அண்டை நாடுகளில் சீனா வளர்ச்சிப்பணி என்ற பெயரில் அந்நாட்டுத் துறைமுகங்களை புதுப்பிக்க கடன் மற்றும் கட்டுமான உதவி செய்து வருகிறது. சீனாவின், "முத்துச்சரம்" என்று அழைக்கப்படும், இந்த முயற்சியின் முத்துக்களில், பர்மாவின் மேற்கு கடற்கரையில் உள்ள, கியாக்பூ தொடங்கி வங்கதேசத்தின் கிழக்கு கோடியில் உள்ள சொனாடியா, இலங்கையில் அம்பாந்தோட்டை மற்றும் பாகிஸ்தானில் குவாதார் ஆகியவை அடங்கும். இலங்கை, சீனாவிடம் பெற்ற கடனை ஈடுகட்ட அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு, 99 ஆண்டு குத்தகைக்கு அளித்துள்ளது. குவாதார் மற்றும் கியாக்பூ ஆகிய துறைமுகங்களின் கதியும் இதேநிலை தான்.

இந்த நாடுகளின் கடற்படைகளுக்கு சீனா குறைந்த விலையில் போர்க்கப்பல்களை அளித்துள்ளது. இவற்றில் பாகிஸ்தானுக்கு அளித்த, எட்டு நீர்மூழ்கிக் கப்பல்களும், வங்கதேசத்திற்கு விற்ற, இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்களும் அடங்கும். மேலும் பல போர்க்கப்பல்களையும், கடல்போருக்கான ஏவுகணைகளையும், பாகிஸ்தானுக்கு அளிக்க சீனாவுடன் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. பாகிஸ்தான், வங்கதேசம், பர்மா, இலங்கை ஆகிய நாடுகளில் ரோந்துப் பணியில் ஈடுபடும் சீனப் போர்க்கப்பல்கள், அவ்வப்போது வந்து போகின்றன

### ஆய்வாளர்கள் கணிப்பு

மாலைதீவில், சீனா, நான்கு மில்லியன் அமெரிக்க டொலருக்கு, "பெய்து பிடோலு" என்ற தீவை, 2066 வரை குத்தகைக்கு எடுத்துள்ளது. அங்கே, சீனாவின் ஆளுமையில் நடந்த கடல் மீட்புப் பணிகளின் விளைவாக, அந்தத் தீவின் பரப்பளவு, 38 ஆயிரம் சதுர கி.மீற்றரிலிருந்து ஒரு இலட்சம் சதுர கி.மீற்றராக வளர்ந்துள்ளது. அங்கே தற்போது, சீனா அமைத்து வரும் கட்டமைப்புகள் அது இராணுவத்தளமாக பயன்படுத்தப்படலாம் என்பது ஆய்வாளர்கள் கணிப்பு. குவாதர் துறைமுகம் சீனக் கடற்படைத் தளமாக மாறி வருகிறது. இவற்றைத் தவிர, கிழக்காபிரிக்காவில், சூயஸ் கால்வாயின் நுழைவு வாயிலில் ட்ஜீபூடி நாட்டில், சீனா 590 மில்லியன் டொலர் செலவில், சீனாவின் முதல் வெளிநாட்டு இராணுவத் தளத்தை அமைத்துள்ளது. 2017இல் இருந்து இயங்கி வரும் இந்தத்தளத்தில், தற்போது விமானந்தாங்கி கப்பல்கள் உபயோகத்திற்கான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இது, இந்தியப் பெருங்கடலில் சீனா தனது வளரும் அரசியல் செல்வாக்கையும், உடைமைகளையும் பாதுகாக்க, சீனக்கடற்படையை உபயோகிக்க தயங்காது என்பதைக் காட்டுகிறது.



தென் சீனக்கடலில் சீனக் கடற்படை மற்ற அண்டை நாடுகளை அச்சுறுத்துவதற்கு உதவியாக அவை உபயோகிக்கப்பட்டுள்ளன. சீனக்கடற்படைக்கு தேவையான போது, அவை இந்திய பாதுகாப்பு மற்றும் முக்கிய அரசுப் பிரிவுகளின் இணையத் தளங்களை ஒட்டுக் கேட்கவும் உதவும். ஆகவே, இந்தியாவை சூழ்ந்துள்ள கடல் பகுதிகளில் சீனக்கப்பல்கள் நடமாட்டம் அதிகமாகி வருவதைப் பற்றி நாம் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

இந்தியப் பெருங்கடலில், தொன்றுதொட்டு, இந்தியாவின் பல்வேறு அரசர்கள், முக்கியமாக, சோழர் மற்றும் பல்லவ அரசுகள், தன் கடற்படைகளை உபயோகித்து தற்கால தாய்லாந்து, இந்தோனேஷியா வரை தன் செல்வாக்கை நிலை நாட்டினர். சொல்லப்போனால், சோழர் கால கலாசார சின்னங்கள், சீனாவில் கூட கண்டறியப்பட்டுள்ளன. ஆகவே, இந்தியர்களுக்கு கடல் வழி வணிகமும் அதைக்காக்க கடற்படைகளின் இயக்கமும் கைவந்த கலையே. தற்போது, இந்தியப் பெருங்கடலில், சீனக்கடற்படையை எதிர்கொள்ளும் பலம் வாய்ந்தது இந்தியக் கடற்படையே.

### இந்தியா முக்கிய பங்கு

அதன்படி, இந்தியக் கடற்படையும் அயல்நாட்டுக் கடற்படைகளும் இணைந்து கடல்வளப்பாதுகாப்புக்கு ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. மேலும், இந்தியப் பெருங்கடல் நாடுகளான ஓமன், மோரிஸ் மற்றும் செய்ஷெல்ஸ் ஆகியவற்றின் பாதுகாப்பில் இந்தியா முக்கிய பங்காற்றி வருகிறது. இந்தியா, பிரான்ஸ் மற்றும் அவுஸ்திரேலியா நாடுகளுடன் கையெழுத்திட்டுள்ள ஒப்பந்தங்களின் படி, அந்த நாடுகளின் தளங்களை இந்தியக் கடற்படை, உபயோகிக்கலாம். இதில் பிரான்சுக்கு சொந்தமான, ட்ஜிபூடி இராணுவத்தளமும் அடங்கும். இத்தகைய சூழலில் அண்டை நாடுகளில் கடந்த பத்து ஆண்டுகளில் சீனா வலிமையாக காலூன்றியுள்ளது. இது தவிர்க்க முடியாதது என்றாலும் இந்த நாடுகளில் நாம் சீனாவின் செயற்பாடுகளை கூர்ந்து கவனிப்பது மிக அவசியம்.


முக்கியமாக, இலங்கை -சீனா பன்முனை உறவுகள் பெருமளவில் வளர்ந்துள்ளன. முக்கியமாக, மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் இலங்கையின் பாதுகாப்பைத் தவிர, அரசியல், பொருளாதாரம் மற்றும் வளர்ச்சிப் பணிகளிலும் சீனாவின் பங்கு அதிகமாயிற்று. இலங்கையில், கொழும்பு கன்டெய்னர் துறைமுகமும், அம்பாந்தோட்டை துறைமுகமும் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளன. தற்போதைய இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியிலும், சீன ஆதிக்கம் எவ்வளவு வளர்கிறது என்பதை இந்தியா தொடர்ந்து கவனித்து வருகிறது.

மாலைதீவிலும் இந்தியாவின் செல்வாக்கை குறைக்க சீனா எடுத்துள்ள முயற்சிகள் ஓரளவு வெற்றி கண்டுள்ளன. இந்திய -பசுபிக் கடற்பகுதிகளில் இதுவரை ஆதிக்கம் செய்து வந்த அமெரிக்க மற்றும் மேற்கத்தேய நாடுகளைத் தவிர இந்தியாவுக்கும், சீனாவின் பெருகி வரும் படைபலம் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே, அவை ,"குவாட்" என்று அழைக்கப்படும் நான்முக பாதுகாப்பு வட்டத்தை அமைத்துள்ளன. அதில் பங்கு பெறும் இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் ஒருங்கிணைந்து பாதுகாப்பு உறவுகளைப் பலப்படுத்தி வருகின்றன. குவாட் அமைப்பில், இந்தியாவுக்கு முக்கியமான பங்குள்ளது. அதற்குக் காரணம், வங்காள விரிகுடாவில் அமைந்துள்ள, 572 தீவுகளை கொண்ட அந்தமான் நிகோபார் தீவுப்பகுதி, பர்மாவிலிருந்து 22 கடல் மைல் தூரத்திலும், தெற்கில், இந்தோனேஷியா,90 கடல் மைல் தூரத்திலும் உள்ளதாகும்.

உலகின் 60 விழுக்காடு வணிக கப்பல்கள், மலாக்கா ஜலசந்தி வழியே கிழக்காசிய நாடுகளையும், சீனா, ஜப்பான், கொரியா ஆகிய நாடுகளையும் அடைய இந்த நீர்வழியைப் பயன்படுத்துகின்றன. ஆகவே தான், அந்தமான் நிகோபார் தீவுகளை இந்தியாவின் மூழ்கடிக்க முடியாத விமானம் தாங்கிக்கப்பல் என்று கடற்போர் நிபுணர்கள் கூறுகின்றனர். கண்காணிப்பில் இருந்து தப்ப முடியாது. ஆகவே, அந்தமான் தீவுகளில் உள்ள இந்திய முப்படைத்தளம், சீனக் கப்பல்கள் இந்தியப் பெருங்கடலில் உபயோகிக்கும் நுழைவுவாயிலான மலாக்கா ஜலசந்தியையும், இந்தோனேஷியாவில் உள்ள ஜலசந்திகளையும் தொடர்ந்து கண்காணிக்க முடிகிறது. இதற்காகவே, இந்தியா, அமெரிக்காவின், பி -81 அதிநவீன கண்காணிப்பு விமானங்களை வாங்கியுள்ளது. ஆகவே, இந்தியாவை அணுகும் சீனக் கப்பல்கள் எளிதில் இந்தியக் கண்காணிப்பில் இருந்து தப்ப முடியாது.

# ஆடி மாத இராசி பலன்கள்

## 16.07.2020-16.08.2020



சார்வரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசியில் குரு, சனி, கேது ஆகிய மூன்று கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. குரு, சனி இரண்டும் வக்கிர இயக்கத்தில் இருப்பதால் இம்மாதம் வளர்ச்சியும் தளர்ச்சியும் மாறிமாறி வரும். இராசிநாதன் குரு வக்கிரம் பெறுவதால் மன பயம் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் தோன்றுவது போல் இனம்புரியாத கவலை ஏற்படும்.

**கடக புதனின் சஞ்சாரம்**

ஜூலை 27 ஆம் திகதி கடக இராசிக்குப் புதன் வருகின்றார். அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கும் இந்த புதன் உங்களுக்கு அனுகூலமான பலன்களையே கொடுக்கும். தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது. இக்காலத்தில் சூரியனோடு இணையும் புதனால் புத-ஆதித்ய யோகம் உருவாகுகிறது. எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.

**மிதுன சுக்கிரனின் சஞ்சாரம்**

ஜூலை 30 ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைக்கலாம். அதன் மூலம் குடும்ப வருமானம் அதிகரிக்கும். கிடைக்காமல் போன ஒப்பந்தங்கள் தேடி வரும். பெண் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். அலுவலகப் பணிகளுக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர்.

**மேஷ செவ்வாயின் சஞ்சாரம்**

ஒகஸ்ட் 12 ஆம் திகதி மேஷ இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். புத்திர ஸ்தானத்திற்கு வரும் செவ்வாய், பிள்ளைகள் வழியில் நல்ல மாற்றங்களை உருவாக்குவார். பிள்ளைகளின் வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். பிள்ளைகளுக்கு




வேலைவாய்ப்பு அமையும். விலகியிருந்த உடன் பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக மாறுவர்.

**சிம்ம புதனின் சஞ்சாரம்**

ஒகஸ்ட் 13 ஆம் திகதி சிம்ம இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் 9 ஆம் இடத்திற்கு வரும்பொழுது நன்மைகள் அதிகம் தருவார். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். அரைகுறையாக நின்ற பணிகள் இப்பொழுது நடைபெறும். தொழில் தொடங்க நினைப்பவர்களுக்கு நண்பர்கள் ஆதரவுக் கரம் நீட்டுவர். உத்தியோகத்தில் சேர விண்ணப்பித்தவர்களுக்கு நல்ல பதில் வந்து சேரும். இம் மாதம் குரு படத்தை இல்லத்து பூஜை அறையில் வைத்து, மாலை அணிவித்து, குரு கவசம் பாடி வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்!**

இம்மாதத் தொடக்கத்தில் விரயங்கள் ஏற்பட்டாலும் மாதத்தின் மையத்தில் மகிழ்ச்சிக்குரிய தகவல் வந்து சேரும். பிரபலமானவர்களின் ஒத்துழைப்போடு சில பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்பும் பாசமும் அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்காலக் கனவுகளை நனவாக்குவீர்கள். வியாழக்கிழமை இல்லத்து பூஜையறையில் குரு கவசம் பாடி வழிபடுவது நல்லது.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

சார்வரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து. பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 12 ஆம் இடமான விரய ஸ்தானத்தில் விரயாதிபதியான குருவோடு சனி, கேது ஆகிய இரண்டு கிரகங்களும் இணைந்து சஞ்சரிக்கின்றன. எனவே வரவைக் காட்டிலும் செலவு கூடுதலாக இருக்கும். வாய்ப்புகள் வந்தாலும் அதை பயன்படுத்த இயலாது. உத்தியோகத்தில் மாற்றங்கள் ஏற்படும். மனக்கலக்கமும் மருத்துவச் செலவும் மக்கட் செல்வங்களால் தொல்லைகளும் வந்து சேரும் மாதம் இது.

**கடக புதனின் சஞ்சாரம்**

ஜூலை 27 ஆம் திகதி கடக இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் சப்தம ஸ்தானத்திற்கு வரும் பொழுது சுபவிரயங்கள் அதிகரிக்கும்.

குடும்ப உறுப்பினரில் யாரேனும் ஒருவருக்கு வேலை கிடைத்து அதன் மூலம் உபரி வருமானம் வருவதற்கு வாய்ப்பும் உண்டு. வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். சிலருக்கு பணி நிரந்தரம் பற்றிய நல்ல தகவல் வரலாம்.

**மிதுன சுக்கிரனின் சஞ்சாரம்**

ஜூலை 30 ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளுக்குரிய கடமைகள் நிறைவேறும். வேலைக்காகக் காத்திருக்கும் பிள்ளைகளுக்கு இப்பொழுது வேலை




கிடைக்கும். கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தீவிரம் காட்டுவீர்கள். 'பழைய தொழிலை மாற்றி வேறு தொழில் செய்யலாமா?' என்று சிந்திக்கும் நேரம் இது.

**மேஷ செவ்வாயின் சஞ்சாரம்**

ஒகஸ்ட் 12 ஆம் திகதி மேஷ இராசிக்குச் செவ்வாய் வருகின்றார். உங்கள் இராசிக்கு 4 ஆம் இடமான சுகஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போவதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். உள்ளத்தில் உற்சாகம் குடிகொள்ளும். தன்னம்பிக்கை துளிர்விடும். வீண்பழிகள் அகலும். 'கட்டுமானப் பணிகளை மீண்டும் தொடங்கலாமா?' என்று சிந்திப்பீர்கள். வாக்குவாதம் செய்த உடன்பிறப்புகள் இப்பொழுது உங்களுக்கு ஒத்துழைப்பு கொடுப்பர்.

**சிம்ம புதனின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். ஒகஸ்ட் 13 ஆம் திகதி அஷ்டம ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கின்றார். 6 இற்கு அதிபதி 8 இல் வரும்பொழுது 'விபரீத இராஜயோகம்' செயற்படும். எனவே திட்டமிடாமல் செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திடீர் திடீரென தனவரவு வரலாம். மனக்கசப்புகள் மாறும். இம்மாதம் பிரதோஷ நேரத்தில் இல்லத்து பூஜை அறையில் நந்தி பதிகம் பாடி நந்தீஸ்வரரையும் சிவனையும் உமையவளையும் வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்!**



இம்மாதம் முற்பாதியைக் காட்டிலும் பிற்பாதி சிறப்பாக இருக்கும். வீண் விரயங்களிலிருந்து விடுபட எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக்கொள்வது உகந்தது. கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு சகப் பணியாளர்களால் தொல்லைகள் ஏற்படலாம். இல்லத்தில் சனி பகவானை நினைத்து சனி கவசம் பாடி வழிபடுவது நல்லது.

# மஞ்சள் தூளில் அதிக கலப்படங்கள் உணவில் சேர்ப்பதால் பாதிப்பு அதிகம்

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

சமகாலத்தில் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் மஞ்சள் தூளில் பல்வேறு கலப்படங்கள் உள்ளதாக பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் பெற்று கொள்ளும் மஞ்சள் தூளில் பல்வேறு கலப்படம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலுக்கமைய விற்பனை நிலையங்களை திடீர் சோதனையிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அவ்வாறு வர்த்தக நிலையங்களில் கிடைத்த மஞ்சள் மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் இயக்குநர் அசேல பண்டார தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய சுற்றிவளைப்புகள் பொதுவான முறையில் நடைபெற்று வருகின்றன.

மோசடியான வர்த்தகர்கள் தொடர்பான தகவல் வழங்குவதற்காக நுகர்வோர் விவகார அதிகார சபையினால் தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 1977 என்ற இலக்கத்தின் ஊடாக பொதுமக்கள் முறைப்பாடுகளை வழங்க முடியும்.

கலப்படம் செய்யப்பட்ட மஞ்சளை உணவில் சேர்த்துக் கொள்வதனால் ஆபத்துக்கள் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ள கைகழுவும் திரவத்திற்கான செலவு ஒரு கோடியைத் தாண்டியுள்ளது

(கொழும்பு)

நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக வாக்குச் சாவடிகளுக்கு செல்லும் வாக்காளர்கள் தொற்று நீக்கும் திரவத்தைப் பயன்படுத்தி இரண்டு முறை கைகளை சுத்தம் செய்ய வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஒரு வாக்காளர் 15 மில்லிலீற்றர் தொற்றுத் திரவத்தைப் பயன்படுத்துவார் எனவும் அவர் கூறியுள்ளார். ஒரு வாக்காளர் பயன்படுத்தும் திரவத்திற்கு ஒரு ரூபாய் செலவாகும்.

இதனடிப்படையில் பொதுத் தேர்தலில் பயன்படுத்தும் கைகழுவும் திரவத்துக்காகத் தேர்தல்கள் ஆணைக்குழு' ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட தொகையை செலவிட்டுள்ளது எனவும் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (ஜ-4)

# தபால்மூல வாக்களிப்பு அமைதியான முறையில் நடைபெற்றது

## பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தகவல்



**(கொழும்பு)**

**தபால்மூல வாக்களிப்புகள் அமைதியான முறையில் நடைபெற்றுள்ளதாகவும் வாக்களிப்பு வீதம் சிறந்த மட்டத்தில் காணப்படுவதாகவும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

தபால்மூல வாக்களிப்பு தொடர்பில் செய்தியாளர்களுக்கு நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புகள் கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமானது. அன்றைய தினம் முற்பகல் 9 மணி முதல் 4 மணி வரை சுகாதார ஊழியர்களுக்கு மாத்திரம் தபால் மூலம் வாக்களிக்க சந்தர்ப்பம் கிடைத்தது.

அரச நிறுவனங்களின் ஊழியர்களுக்கு கடந்த 14 மற்றும் 15 ஆம் திகதி தபால்மூலம் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் பாதுகாப்புப் படையினர், பொலிஸார், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினர், சுகாதாரப் பிரிவினர், மாவட்ட செயலகங்களில் உள்ள தேர்தல் அலுவலகங்களில் தபால்மூலம் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

வழங்கப்பட்ட தினங்களில் வாக்களிக்க முடியாத தபால் மூல வாக்காளர்கள் நாளை மற்றும் நாளை மறுதினம் மாவட்ட செயலகங்களில் உள்ள தேர்தல் அலுவலகங்களில் தபால்மூல வாக்குகளை அளிக்க வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொரொனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் அதிகளவில் தபால்மூல வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் மொனராகலை, காலி போன்ற இடங்களில் சில அசம்பாவிதங்கள் நடந்துள்ளன. வாக்கெடுப்பை புகைப்படம் எடுத்தல், வாக்களிப்பு நிலையங்களுக்கு வெளியில் புள்ளடி இடப்பட்ட அட்டைகள் விநியோகிக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் நடந்துள்ளன.

வாக்கெடுப்பு நிலையங்கள் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய அமைக்கப்பட்டிருந்தன. சில வாக்கெடுப்பு நிலையங்களில் சுகாதார அதிகாரிகள் இருக்கவில்லை.

இதேவேளை வாக்களிப்பு நிலைய பிரதிநிதிகளின் வருகை 75 வீதமாக காணப்பட்டது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் 51 வீதமான பிரதிநிதிகளும் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் சார்பில் 32 வீதமான பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# பொலிஸ் நிலையத்தின் முன் பதற்றம் 14 பேர் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

அங்குலான பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்ற போராட்டம் மற்றும் பதற்றநிலை தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 9 பெண்கள் உட்பட 14 பேர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் அங்குலான பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய பிரதான சாட்சியாளர்கள் இருவர் கடந்த வியாழக்கிழமை பொலிஸ் அதிகாரிகளால் ஜீப் ஒன்றில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதையடுத்து, பொலிஸ் நிலையத்தின் முன்னால் அப்பகுதி மக்கள் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில் பொலிஸார் மற்றும் மக்களுக்கு இடையில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸ் நிலையத்தின் மீது கல்வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதுடன் பொலிஸார் அவர்கள் மீது கண்ணீர் புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தில் 8 பொலிஸார் காயமடைந்த நிலையில் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# பேருந்துகளில் ஆசனத்திற்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்லத் தடை

(கொழும்பு)

பேருந்து ஆசன எண்ணிக்கைக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்வது தடைசெய்யப்பட்டிருப்பதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரித்துள்ளார்.

ஆசனங்களின் எண்ணிக்கையை விட அதிகளவிலான பயணிகளை ஏற்றிச் செல்வதை தவிர்க்குமாறு பேருந்து உரிமையாளர்களுக்கும், நடத்துநர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இவற்றைக் கருத்திற் கொள்ளாமல் சில தனியார் பேருந்துகள் தொடர்ந்தும் அதிகளவிலான பயணிகளை ஏற்றிச் செல்வதாக முறையிடப்படுகிறது. கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை முழுமையாக பின்பற்றுமாறு இவர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனை மீறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தப்பிக்கும் தாவரங்கள்

ஒரு ஆபத்திலேயே இருந்து தப்பிக்க வேண்டும் என்றால் நாங்கள் என்ன செய்கின்றோம்?

உடனே ஓடிப்போகின்றோம். அந்த இடத்திலே இருந்து மிருகங்களும் தப்பிக்கொள்ள அப்படித் தான் செய்கின்றது. எங்களுக்கு கால் இருக்கின்றது அதனால் சௌகரியமாகப் போய் விட்டது. ஆனால் மரம், செடி, கொடிகள் இருக்கே அவற்றுக்கு எல்லாம் ஆபத்து வந்தால் உடனே அந்த இடத்திலேயே இருந்து தப்பி ஓடிப்போக முடியுமா? இந்த இடத்திலே பெரியமரம் இருந்தது....எங்கே சேர்? என்று கேட்டால்....

“நீங்கள் இன்றைக்கு அந்த மரத்தை வெட்ட வருவீர்கள் என்று தெரியும்....அதனால் அது புறப்பட்டுப் புதுக்கோட்டை பக்கம் போய் விட்டது” என்றா சொல்லுவோம்?

அது எப்படி முடியும்? . ஆனால் தாவரங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்தால் அதிலே இருந்து தப்பித்துக்கொள்வதற்கு சில வேலைகளைச் செய்வதாகக் கண்டு பிடித்து உள்ளார்கள். தென்னாபிரிக்காவிலே பிரிட்டோரியா என்று ஓர் இடம். அங்கே வான்ஹோவர் என்று ஒருத்தர் உயிரியல் ஆராய்ச்சியாளர். ஆராய்ச்சி எல்லாம் செய்து பார்த்து விட்டு தாவரங்கள் ஒன்றுக்கொன்று பேசிக்கொள்கின்றது என்றார். பேசுகின்றது என்று சொன்ன உடனே நீங்கள் எந்த பாசையிலே பேசுகின்றது? இங்கிலீஷா? தமிழா? என்று கேட்கக்கூடாது.

மொழி இல்லாமலேயே....அதெல்லாம் செய்திகளை பரிமாறிக் கொள்கின்றது. இது ரொம்ப ஆச்சரியமான விடயம் தான். ஒரு சமயம் தென்னாபிரிக்காவிலே கடுமையான வறட்சி ஏற்பட்டதாம்!

அது ரொம்ப தீவிரமாகப்போய் விட்டதாம்! மேய்வதற்கு புல் கூட கிடைக்காத நிலைமை! அங்கே இருந்த காட்டு மான்கள் எல்லாம் வேறு வழி இல்லாமல் அக்கேஷிய இனத் தாவரத்தை சாப்பிட வேண்டிய நிலைமை. அப்படி அதை சாப்பிட்ட மான்கள் எல்லாம் கூட்டம் கூட்டமாக சாக ஆரம்பித்தது. ஏன் இப்படி எல்லாம் இறந்து போகின்றது? என்று வான்ஹோவர் ஆராய்ச்சி செய்தார். அக்கேஷியத் தாவரத்திலே “டானிங்” என்கின்ற நச்சுப் பொருள் உண்டு. இருந்தாலும் கூட விலங்குகளைக் கொல்லக்கூடிய சக்தி அதற்குக் கிடையாது. ஆனால் குறிப்பிட்ட அந்த சமயத்திலே இந்த விஷப்பொருள் அந்தத் தாவரங்களிலே திடீர் என்று அதிகமாக ஆகி விட்டதாம்!

அதனாலே தான் மான்கள் இறந்து விட்டது என்று கண்டு பிடித்தார்கள். சரி! அந்தத் தாவரத்திரே திடீர் என்று விஷப்பொருள் அதிகமாகப் போவதற்கு காரணம் என்ன? இது தான் வான்ஹோவருக்கு ஏற்பட்ட சந்தேகம். ஆராய்ச்சி பண்ணி அந்த சந்தேகத்திற்கு விடையைக் கண்டு பிடித்தார். அது என்ன விஷயம் என்றால் ஏதாவது ஒரு மிருகம் ஒரு அக்ஷேயத் தாவரத்தின் ஒரு பகுதியைக் கடிக்க ஆரம்பிக்கின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள். உடனே அந்தத் தாவரம் தாக்குதலை முறியடிக்க “எத்திலீன்” என்கின்ற வாயுப்பொருளை உற்பத்தி செய்கின்றது. இந்த வாயு உடனடியாக சுற்றிலும் பரவுகின்றது. இருபது நிமிடநேரத்துக்குள்ளே 50 மீற்றர் சுற்றளவுக்கு அது பரவுகின்றதாம். உடனே மற்ற செடிகள் எல்லாம்...“எதிரி வருகின்றான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்” என்பதை இதிலே இருந்த புரிந்து கொள்கின்றதாம். புரிந்து கொண்டு உடனடியாக தனக்குள்ளே இருக்கின்ற “டானின்“ என்கின்ற நச்சு உற்பத்தியை அதிகரித்து விடுகின்றது. விஷம் அதிகமாகப் போகின்றதனாலே அதைக் கடிக்கின்ற மிருகங்கள் இறந்து போய் விடுகின்றது. ஆகக்கூடிய – எத்தலீன் வாயு ஏன் உற்பத்தி ஆகின்றது என்று பார்த்தால்? எதிரிகள் ஜாக் கிரதை என்கின்ற செய்தியை மற்ற மரங்களுக்கு தெரிவிப்பதற்கு தான். ஷுகர் மேப்பிள் –அப்படி என்று ஒரு மரமாம் . அதுவும் இதே பாணியிலேயே தான் எதிரிகளை சமாளிக்கின்றதாம். இவை எல்லாம் கேள்விப்படும் பொழுது நாங்கள் இனிமேல் மரங்களிடமும் ஜாக்கிரதையாக பழக வேண்டும் போலே இருக்கின்றது. ஒரு காட்டிலே திருட்டு மரம் வெட்டுவதற்காகப் போனான் ஒருத்தன். பகல் நேரத்திலேயே அவன் காட்டுக்குப் போயிடுவான். இருட்டும் வரைக்கும் தன்னைச்சுற்றி செடி கொடிகளை எடுத்துச் சுத்திக்கொண்டு ஒரு புதர் செடி மாதிரி ஒரு இடத்திலே அசையாமல் உட்கார்ந்துகொள்வான். பார்க்கின்றவர்கள் ஏதோ ஒரு புதர் செடி என்று தான் நினைப்பார்கள். இருட்டியதற்குப் பிறகு வெளியே வந்து தன் வேலையை ஆரம்பிப்பான். அது மாதிரி இவன் ஒரு நாள் அங்கே போய் புதர் மாதிரி உட்கார்ந்திருந்தான்.

இருட்டியதற்குப்பிறகு மெதுவாக வெளியே வர ஆரம்பித்தான். அப்போது பக்கத்திலே இருந்த இன்னொரு புதர் செடி மெதுவாக இவன் பக்கம் நகர ஆரம்பித்தது.

என்ன இது செடி நகர்ந்து வருகின்றது? இவன் அதைப் பார்த்ததும் பயந்து விட்டான். ஐயோ என்னை மன்னித்து விடு செடியே !

உனக்கு எல்லாம் உணர்வு இருக்கின்றது என்று இன்று ஒரு தகவலிலே கேட்டு இருக்கின்றேன். இப்பத் தான் அதை நேரிலே பார்க்கின்றேன். இனிமேல் காட்டிலே மரமே வெட்டமாட்டேன். என்னை மன்னித்து விடு என்று கத்தினான். இப்போ அந்த செடி பேசியது. அது எப்படிடா மன்னிக்க முடியும்? உன்னை பிடிப்பதற்கு மூன்று நாட்களாக அன்னம் ஆகாரம் இல்லாமல் இதற்குள்ளே உட்கார்ந்து இருக்கின்றேன். அப்படி என்று சொல்லிக்கொண்டே அதற்குள்ளே இருந்து எழுந்து வெளியே வந்தார் காட்டிலாகா அதிகாரி!


அடுத்த 5 வருடங்களில் யாழ், கிளிநொச்சி மாவட்டங்களை
முதல்நிலை மாவட்டங்களாக மாற்றும் பயணத்தின் செயல்திட்ட வரைவு
என் கனவு யாழ்
மிக விரைவில்...!
X 1
அங்கஜன் இராமநாதன்
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி - Sri Lanka Freedom Party
(C-062)
செயல்திட்ட வரைவு தொடர்பான மேலதிக தகவல்களுக்கு
www.enkanavuyarl.lk
சமூக வலைத்தளங்களில் பின்தொடர...
@enkanavuyarl
@enkanavuyarl
@enkanavuyarl
@enkanavuyarl
/enkanavuyarl
@enkanavuyarl
செயலியை தரவிறக்கம் செய்ய...
Coming soon to Google play
App Store

# பாசாங்கு செய்வதை நிறுத்தி கொரோனாவை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்

## அரசாங்கத்தை எச்சரிக்கும் மருத்துவ நிபுணர்கள் சங்கம்

(கொழும்பு)

**நாட்டில் தற்போது எவ்வித நெருக்கடி நிலையும் இல்லை என்று பாசாங்கு செய்வதை அரசாங்கம் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும், தேவையேற்படும் பட்சத்தில் நாட்டை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் முடக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ள இலங்கை மருத்துவ நிபுணர்கள் சங்கம், தாமதப்படுத்தாமல் உடனடியாக கொவிட் - 19 கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு அவசியமான, உறுதியான கட்டுப்பாடுகளை விதிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.**

நாட்டில் தற்போது காணப்படும் கொவிட் - 19 கொரோனா வைரஸ் பரவல் நிலையானது அலட்சியப்படுத்தப்படும் பட்சத்தில், இலங்கை மற்றுமொரு பிரேஸிலாகவோ அல்லது இந்தியாவாகவோ மாறலாம் என்று மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் வைத்திய நிபுணர் எல்.ஏ.ரணசிங்க எச்சரித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி நாட்டில் ஒரு உடனடியான அல்லது ஏற்கனவே காணப்பட்ட கொரோனா வைரஸ் சமூகப்பரவல் நிலையொன்று இருக்கலாமெனவும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

கடந்த 14 ஆம் திகதியிலிருந்து நாட்டில் தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட விதம், நிலைமை தீவிரமடைந்திருப்பதை உணர்த்துவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். "சிலர் இதனைக் கொத்தணி தொற்றுப்பரவல் என்று கூறுகின்றார்கள்.

ஆனால் தற்போது கண்டறியப்பட்ட தொற்றாளர்களிடமிருந்து, அவர்கள் தொடர்புகளைப் பேணியவர்களுக்கும் இது பரவியிருக்க முடியும்" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை தேர்தல் பிரசாரங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் ஒன்றுகூடும் கூட்டங்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புக்கள் போன்றவற்றுக்குக் கட்டுப்பாடுகளை விதித்தல், பாடசாலைகளை மீளத்திறப்பது குறித்து நன்கு ஆராய்தல், பொதுப் போக்குவரத்துக்கான கட்டுப்பாடுகளை விதித்தல் ஆகியவை மிகவும் அவசியமானவை என்று மருத்துவ நிபுணர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

"நாட்டில் மேலும் தொற்று ஏற்படுவதைத் தடுப்பதற்கு, தற்போது குறைந்த அளவிலேனும் கொரோனா வைரஸ் சமூகப்பரவல் நிலை ஏற்பட்டிருக்கிறது என்று நம்புவது விவேகமானது என்றே நாங்கள் கருதுகின்றோம். ஏனெனில் இது மிகவும் பயங்கரமான விடயமாகவே இருக்கின்றது" என்றும் மருத்துவ நிபுணர்கள் சங்கம் கூறியுள்ளது.

மேலும் இத்தகையதொரு தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்கு எமது நாட்டில் பற்றாக் குறையாக இருக்கும் மருத்துவ வசதிகள் தொடர்பில் சுட்டிக்காட்டியிருக்கும் சங்கம், "தேசிய ரீதியில் பெருமளவானோருக்கு சிகிச்சையளிப்பதற்கு எம்மிடம் போதுமான மருத்துவ சுகாதார வசதிகள் இல்லை என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளது.

எனவே தாமதப்படுத்தாமல் உடனடியாக கொவிட் - 19 கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு அவசியமான, உறுதியான கட்டுப்பாடுகளை விதிக்குமாறும், சமூகத்தில் எழுமாற்றாக நபர்களைத் தெரிவு செய்து பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மருத்துவ நிபுணர்கள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. (ஜ-4)

# மரண அறிவித்தல்

## முத்துவேலு கந்தசாமி

### (ஓய்வுபெற்ற தபால் ஊழியர், அக்கராயன்)



தோற்றம் 1946.03.11 மறைவு 2020.07.17

பளையைப் பிறப்பிடமாகவும், இல.123, ஸ்கந்தபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும், தற்போது கச்சாய் வீதி, கொடிகாமத்தில் வசித்து வந்த முத்துவேலு கந்தசாமி (ஓய்வு பெற்ற தபால் ஊழியர், அக்கராயன்) 17.07.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துவேலு - செல்லம்மா தம்பதிகளின் அன்புமகனும், மகேஸ்வரியின் அன்பு பெறாமகனும், வசந்தலாதேவியின் அன்புக் கணவரும், பிரதீபா, பமிலா (லண்டன்), பிரஸன்னா (சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வகுமார் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்- கிளிநொச்சி), வசீகரன் (லண்டன்), சோபிகா (சுவிஸ்), ஆகியோரின் மாமனாரும், அபிதாப், அபிசாரங்கன், அபிசாதனா, சகாஸ் (லண்டன்), பமேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 19.07.2020 ஞாயிற்றுக் கிழமை மதியம் 01.00 மணிக்கு கச்சாய் வீதியிலுள்ள இல்லத்தில் இடம்பெற்று கச்சாய், பாலாவித்தாள் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சு. கதிர்காமநாதன் குடும்பத்தினர்
0762162671, 0776412064

7/1, திருவையாறு,
கிளிநொச்சி.

(C-3344)

# கிராமங்களை நிறைவான கிராமம் ஆக்குவதே எமது நோக்கம்

## அங்கஜன் திட்டவட்டம்

(சாவகச்சேரி)



கிராமங்கள் நிறைவான கிராமங்கள். அதனால் தான் அதில் வாழும் மக்கள் முன்னேற்றமடைகிறார்கள் என முன்னாள் விவசாயப் பிரதி அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளருமாகிய அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார். அண்மையில் சாவகச்சேரி பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர் பொறுப்புக் கூறுபவராக இருக்க வேண்டும். அந்த வகையில் நான் கடந்த நான்கரை வருடங்களில் 6597 வேலைத்திட்டங்களை மக்களிடம் கொண்டுபோய் சேர்த்துள்ளேன். அதனூடாக நான்கு இலட்சம் பயனாளிகளை உருவாக்க முடிந்தது. குறிப்பாக பிரதி விவசாய அமைச்சராக 5 மாத காலம் இருந்தேன்.

அந்த 5 மாதத்தில் கிட்டத்தட்ட ஆறாயிரம் இலட்சம் ரூபாவை விவசாயிகளின் முன்னேற்றம் மற்றும் ஊக்கத்திற்காக கொண்டு வந்து சேர்க்க முடிந்தது. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலின் பின் புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்ட பின்னர் எனக்கு யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தியைக் கட்டி எழுப்புவதற்கான முக்கியமான ஓர் பதவியைத் தந்தார்கள். யாழ்.மாவட்டத்தில் உள்ள 435 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் மக்களுக்கான வேலைத்திட்டம் நடைபெற வேண்டும் என்பதே எமது எண்ணம். அந்த அடிப்படையில் சகல கிராமங்களிலும் அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில் நிறைவான கிராமம் என்ற திட்டம் ஏற்படுத்தப்பட்டது. முக்காவாசி மக்கள் வாழ்வது கிராமங்களில் தான். அதனடிப்படையில் கிராமங்கள் நிறைவான கிராமங்கள் தான். அதனால் அதில் வாழும் மக்கள் முன்னேற்றமடைவார்கள். அப்போது தான் அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்ல வாய்ப்புக் கிடைக்கும். நிறைவான கிராமம் வேலைத்திட்டம் ஆரம்பித்து ஒவ்வொரு கிராமங்களுக்கும் தலா 20 இலட்சம் அடிப்படையில் 435 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குமாக 8700 இலட்சம் ரூபாவை கொண்டுவந்து சேர்க்க முடிந்தது. இவ்வாறு ஒவ்வொரு வருடமும் இப்படியான நிதிகளைக் கொண்டுவந்து கிராமங்களை நிறைவான கிராமங்கள் ஆக்குவதே எமது நோக்கம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2-30)

# உற்பத்தியை நிறுத்தியுள்ள தேயிலை தொழிற்சாலைகளை மீள ஆரம்பியுங்கள்

(கொழும்பு)

மத்திய மாகாணத்தில் உற்பத்தியை நிறுத்தியுள்ள தேயிலைத் தொழிற்சாலைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து ஒரு வார காலத்திற்குள் அந்த தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தேயிலை சபைக்கு ஆலோசனை வழங்கினார்.



13 தேயிலைத் தொழிற்சாலைகளின் உற்பத்திகளை நிறுத்துவது குறித்து எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் வழங்கப்படக்கூடிய தீர்வு தொடர்பில் கலந்துரையாடும் பொருட்டு நேற்று முன்தினம் முற்பகல் அலரிமாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலொன்றின் போதே பிரதமர் மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார். (ஜ-4)

# 100 இலங்கையர்கள் நாடு திரும்பினர்




(கொழும்பு)

வெளிநாடுகளில் தங்கியிருந்த மேலும் 100 பேர் நேற்று நாடு திரும்பினர்.

நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வந்த விசேட விமானங்கள் மூலமாகவே இவர்கள் நாட்டிற்குள் வந்தடைந்தனர்.

குறித்த நபர்கள் சீனா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)



# ஆன்மீகம்

## வாழ்க்கையை எட்டு எட்டாகத் திட்டமிடுவோம்!

(நேற்றைய தொடர்ச்சி)

இந்த வாரத்தில் இந்தப் பாடங்களை நடத்த வேண்டும். அடுத்த மாதம் ஆரம்பத்தில் காலாண்டுத் தேர்வு, பின் திட்டமிட்ட மாதத்தில் அரையாண்டுத் தேர்வு என வரையறை செய்து கொண்ட பள்ளி நிறுவனம்தான் தகுதிப் பட்டியலில் தனி இடம் பெறுகிறது. நிதி நிலைத் திட்டத்தை நிச்சயித்தும் ஐந்தாண்டுத் திட்டத்தை அமைத்தும் செயற்படும் அரசாங்கமே மக்கள் மனதில் இடம்பெறுகிறது. காலக் கணக்கு, நேர நிர்வாகம் என்பது நமது இலட்சியத்தை இடரின்றி நாம் எய்த வழி செய்கின்றது.

**முதல் எட்டில் ஆடாதது விளையாட்டல்ல!**

**இரண்டாம் எட்டில் கல்லாதது கல்வியுமல்ல!**

**மூன்றாம் எட்டில் செய்யாதது திருமணம் அல்ல!**

**நாலாம் எட்டில் பெறாதது குழந்தையும் அல்ல!**

**ஐந்தாம் எட்டில் சேர்க்காதது செல்வமும் அல்ல!**

**ஆறாம் எட்டில் சுற்றாதது உலகமும் அல்ல!**

**ஏழாம் எட்டில் காணாதது ஓய்வும் அல்ல!**

**எட்டாம் எட்டிற்கும் மேலிருந்தால் நிம்மதி அல்ல!**

என்னும் வைரமுத்துவின் திரைப்பாடல் திட்டம் இடுதலின் சிறப்பை சிறப்பாக விளக்குகிறதே. நெப்போலியனின் வெற்றிகள் அனைத்தும் அவன் நேரம் தவறாமைக்குக் கிடைத்த நேரிய பரிசுகளே. வேலையில் ஈடுபடுவது, விவாதம் செய்வது, உண்பது, உறங்குவது என அனைத்திற்கும் அளவான நேரத்தை ஒதுக்கீடு செய்தான் அவன். ஒருசமயம் நெப்போலியன் தன்னுடைய தளபதிகளைப் பாராட்டவும் உற்சாகப்படுத்தவும் உணவு விருந்து ஒன்றிற்கு ஏற்பாடு செய்து இத்தனை மணிக்கு எல்லோரும் வாருங்கள் என்று நேரம் குறித்தான். ஆனால் தளபதிகள் சற்றுத் தாமதமாகவே வந்தனர்.

நெப்போலியன் குறித்த நேரத்தில் தனியாகவே சாப்பிட்டு விட்டு மேசையை விட்டு எழுந்தான். அன்பிற்குரிய என் அருமை தளபதிகளே! சாப்பிடும் நேரம் முடிந்து விட்டது. இப்போது வேலை செய்யும் நேரம் தொடங்கி விட்டது. புறப்படுங்கள் நொடியும் தாமதிக்காமல் செயலில் ஈடுபடுவோம் என்றான்.

நேர நிர்வாகம் என்பது ஏட்டளவில் தான் பலருக்கு இருக்கிறது. நெப்போலியனின் நெஞ்சுரம் நமக்கும் வேண்டும். கந்தபுராணத்தில் ஒரு காட்சி. சூரபத்மனின் படைகளுக்கும் முருகப் பெருமானின் சைனியங்களுக்கும் இடையே பெரும்போர் மூள்கிறது. முருகப் பெருமானின் தூதுவனாக விளங்கியவர் வீரபாகு. வீரபாகுவும் சூரனின் மகனான பானுகோபனும் போர்க்களத்தில் எதிரெதிர் மோதுகிறார்கள். முதல் மூன்று நாட்கள் போரில் பானுகோபனே வெல்கிறான்.

தன்னால் இயன்ற அளவு வீரத்தைக் காட்டியும் பானுகோபனை வெல்ல முடியவில்லையே, கொல்ல முடியவில்லையே என்று வீரபாகு வேதனைப்படுகிறார். பின் தனக்குத்தானே ஒரு சபதம் செய்து கொள்கிறார். பானுகோபனை வெற்றி கொண்ட பிறகே ஆறுமுகப் பெருமானின் முகத்தில் விழிப்பேன். ஐந்தாம் நாள் போரில் இவ்வீரச் செயலை நிகழ்த்திக் காட்டுவேன் என சூளுரை ஏற்கிறார்.

'ஐந்தாம் நாள் போரில் வெல்வேன்' என திட்டம் இட்டதால் அவரின் திறமை பன்மடங்கானது. அவர் வெற்றி பெற்றார். 'இதுவே இச்செயலை நிறைவேற்ற இறுதியான தினம்' என எல்லைக்கோடு வகுத்துக் கொள்வதை டெட்லைன் (Deadline) என ஆங்கிலத்தில் சொல்வார்கள். உண்மையில் டெட்லைன் தான் தம்மை வாழ்விக்கும் கோடு என்பதைப் புரிந்து கொள்வோம்.

# செய்தித்துளிகள்

## தம்பதியை பலியெடுத்த காட்டு யானை!

(மொனராகலை)

மொனராகலை - புத்தல, ஒக்கம்பிடிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்பேயாய பிரதேசத்தில் காட்டு யானைத் தாக்குதலுக்கு உள்ளாகி தம்பதியினர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை இறப்பர் பால் வெட்டிக் கொண்டிருந்த இருவரே இவ்வாறு காட்டு யானைத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இச்சம்பவத்தில் 57 வயதுடைய பெண் ஒருவரும் 70 வய்துடைய அவரது கணவனுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (ஜ-4)

## ஹெரோயினுடன் இருவர் கைது

(கொழும்பு)

அத்துருகிரிய அரங்கல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு ஒன்றில் 5 கிராம் 800 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடமிருந்து 96 ஆயிரத்து 160 ரூபாய் பணமும், இராணுவ சீருடை தொகை ஒன்றும், தடைசெய்யப்பட்ட இரண்டு கத்திகள், தோட்டாக்கள் 2, ஆட்டோ ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

39 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை, கண்டி பெல்லேகெலே பிரதேசத்தில் 5 கிராம் ஹெரோயினுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 24 வயதுடைய வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ஜ-4)

## போதைப்பொருள் குற்றவாளிகள் பூஸா சிறைச்சாலைக்கு மாற்றம்

(கொழும்பு)

போதைப்பொருள் வியாபாரம் உள்ளிட்ட குற்றங்களுடன் தொடர்புடைய ஐந்து பேர் பூஸா சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

நாட்டில் உள்ள பல சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் மற்றும் பாதாள உலகக்குழு செயற்பாடுகள், போதைப்பொருள் வியாபாரம் உள்ளிட்ட குற்றங்களுடன் தொடர்புடையவர்களே இவ்வாறு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 180 | 250 | 250 |
| தக்காளி | 120 | 150 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 100 |
| கோவா | 150 | 140 | 120 |
| கரட் | 100 | 160 | 200 |
| பூசணி | 50 | 50 | 60 |
| புடோல் | 60 | 50 | 100 |
| வாழைக்காய் | 140 | 140 | 160 |
| சின்ன வெங்காயம் | 200 | 150 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 250 | 350 | 300 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 90 | 120 | 100 |
| பயற்றங்காய் | 150 | 180 | 160 |
| லீக்ஸ் | 140 | 140 | 120 |
| பீற்றூட் | 100 | 120 | 120 |
| கறிமிளகாய் | 250 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 140 | 150 | 120 |
| போஞ்சி | 160 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 140 | 160 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 250 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 60-80 |
| இராசவள்ளி | --- | 250 | --- |
| வெங்காயப்பூ | 250 | 240 | 280 |
| முள்ளங்கி | 100 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 |
| வல்லாரை | 60 | 50 | 30 |
| ஈரப்பலா | 50 | 70 | 60 |

# மாவைக்கந்தனின் மகத்துவமான தேர் இன்று

"ஈழம் சிவபூமி" என்பது திருமூலரின் கூற்றாகும். அதுமட்டுமன்றி அக்கூற்றினை மெய்ப்பிக்குமாறு நாற்றிசைகளில் நால்வேறு ஈச்சரங்களையுமுடையது எமது ஈழத்திருநாடு. ஈழநாட்டின் சிரம் எனத் திகழும் வடமாகாணத்தில் வடதிசையில் கண்டகித் தீர்த்தக்கரையில் இருந்து சில மைல் தொலைவில் கோயில் கொண்டுள்ள தலமே மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் ஆகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றையும் ஒருங்கே கொண்டுள்ள ஆலயம் இதுவாகும். மாவைக்கந்தன் ஆலயமானது தொன்று தொட்டு அபிஷேகத்திற்கு விசேடத்துவமானது. இதனாலேயே மாவைக்கந்தன் "அபிஷேகக் கந்தன்" எனச் சிறப்புப் பெயர் பெற்று விளங்குகின்றான்.

சோழ மன்னனின் மகள் மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகத்தை நீக்கி மானிட முகமாக மாற்றிய தீர்த்தத்தலம் இதுவென்பது சிறப்பம்சமாகும். இச்சிறப்பிற்குரிய ஆலயம் அமைவதற்கு காரணமாகவிருந்த மாருதப்புரவீக வல்லி அக்காலத்தில் குடியிருந்த "குமாரத்தி பள்ளம்" எனும் இடம் தற்போதும் இருப்பதை நாம் காணலாம்.

எனினும் கண்டகித் தீர்த்தத்தில் நீராடிய மங்கை மாருதப்புரவீகவல்லி அங்கிருந்து வந்து கோயிற் கடவை (தற்போதைய மாவிட்டபுரம்) எனும் இடத்திலிருந்த வடிவேலனை வணங்கி திருவருளைப் பெற்றாா். இதன் பின்னரே கோயிற்கடவை எனப்பெயர் பெற்ற குதிரை முகம் நீங்கிய இடம் அதாவது மாமுகம் நீங்கிய இடம் என்பதனால் மாவிட்டபுரம் எனப் பெயர் பெற்றது.

இவ்வாறு இவ் ஆலயத்திற்குரிய காங்கேயன் விக்கிரகத்தை இந்தியாவிலேயிருந்து குரக்கன் துறைவழியே கொண்டு வந்தனர். இவ்விக்கிரகம் கொண்டு வந்து இறங்கிய இடம் என்பதனாலேயே காங்கேசன்துறை எனத் தொன்றுதொட்டு இன்றுவரை அழைக்கப்படுகிறது.

இவ்வாறு கொண்டுவந்த விக்கிரகத்தினை பிரதிஷ்டை செய்து மஹா கும்பாபிஷேகத்தைச் செய்தனர். கி.பி.789 ஆம் ஆண்டளவில் சிதம்பர வம்சாவளி தீஷ்ஷகர் பெரிய மணத்துள்ளார் என்பவரே நடத்தி வைத்து கிரியை வழிபாடுகளை மேற்கொண்டார் என்பது தல வரலாறு ஆகும்.

இவ்வாறே தொன்றுதொட்டு வரும் மஹோற்சவமானது ஆனி மாத பூர்வபட்ச சஷ்ஷ திதியில் கொடியேற்றத்துடன்



ஆரம்பமாகி 25 நாட்களை சிறப்பாகக் கொண்டு ஆடி அமாவாசையன்று தீர்த்தத் திருவிழாவுடன் கொடியிறக்கமும் இடம்பெற்று முடிவடைகின்றது.

மாவைக்கந்தன் கஜாவல்லி மகாவல்லி சமேத காங்கேயமூர்த்தியாய் மாவையம்பதியினில் அமர்ந்து அருளாசி புரிகின்றான். அவனது அடியார்கள் எந்த நேரத்தில் பூஜைகள் நடைபெற்றாலும் அதனை தரிசனம் செய்தே செல்வார்கள். எத்தனை வேலைச்சுமை இருந்தாலும் அதையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு நாடுகடந்து, மாவட்டம் கடந்து கூட ஓடோடி வந்து கந்தப்பெருமானே எங்களை ஆளுபவன் என நம்பி ஓடோடி வருவார்கள். தமது தீராத வினையெல்லாம் தீர்த்து வரங்களைப் பெற்று சிறப்புடன் வாழ வழியமைத்துக் கொள்கின்றனர்.

இத்தகைய சிறப்புக்களையுடைய இத்தலம் பெருமையுடன் சிறப்புற விளங்கிய வேளை திடீரென ஏற்பட்ட அந்நிய படையெடுப்புக்களினால் பெரும் சேதத்திற்குள்ளாகியது. குறுகிய காலப்பகுதியிலேயே புத்துயிர் பெற்று மிளிர்ந்தது.

யுத்தத்தின்போது பெரும் சேதத்துக்குள்ளான ஆலயம் தனது உடைமைகளையும் இழந்தது. 180kg எடையுள்ள; 21 அடி உயரம் கொண்ட; வெள்ளியிலான கொடிஸ்தம்பம் களவாடப்பட்டு விட்டது. பஞ்சரத பவனி கண்ட வீதியில் தற்போது 45 அடி உயரம் கொண்ட "முகஉத்தர" எனப் பெயர் கொண்ட தேர் மட்டுமே தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 80 அடி உயர பெரிய சப்பறம் எரிக்கப்பட்டது. ஆலய ஆவணங்கள், சுவடிகள் என்பன களவாடப்பட்டன, சில எரிக்கப்பட்டன.

அரச உதவியுடன் மக்களின் நன்கொடையினாலும் ஆலயம் மெல்ல மெல்ல அழகு பெறுவதை நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. 108 அடி நீளம் கொண்ட வசந்தமண்டபம் அமைக்கப்பட்டு ஒவ்வொரு தூண்களும் சிறப்புக்குரிய முறையில் தெய்வீக சிலைகளைக் கொண்டு மிளிர்வதை அவதானிக்கலாம். வில்லு மண்டப வேலைகளுடன் சிறப்புற வர்ணப்பூச்சு வேலைகளும் கொண்டு மிளிர்கின்றது. இரண்டாம் வீதிக்கான புனருர்த்தாபன வேலைகள் எல்லாமே திருப்பணிமூலமே நிறைவேற்ற வேண்டியுள்ளது.

கருங்கல்லினாலான வேலைப்பாடுகளுடன் கூடிய மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்பனவுடன் வில்லுமண்ட வேலையுடன் கொடிஸ்தம்ப மண்டபமும் காணப்படுகின்றது. வில்லுமண்டபத்தில்வள்ளி, தெய்வயானை திருமணம், சூரன்போர் சிலைகளும் நிர்மாணிக்கப்பட்டு காணப்படுகின்றது. உள்வீதி வேலைகள் எல்லாம் ஓரளவிற்கு சிறப்பாக நடைபெற்று 18 முனிவர்களின் சித்திரங்களும் ஆறுபடை வீட்டு முருகனின் சித்திரங்களும் சரவணப்பொய்கையில் முருகன் தோன்றி தவழ்வது போன்ற சித்திரங்கள் ஆலயத்தின் தெய்வீக தன்மையை உயர்த்துகின்றது.

மாவைக்கந்தனது கும்பாபிஷேகம் காண மாவைக்கந்தனது திருவருளைப் பெற ஓடோடிவந்து தரிசனம் செய்யுங்கள்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஜெ.ஜெயவினோதனன்
புனித பரியோவான்
கல்லூரி,

# தன்னை கைதுசெய்ய எடுக்கும் முயற்சிகளுக்கு தடை விதிக்குமாறு கோரி றிசாத் உயர் நீதிமன்றில் மனு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலைக்குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலான பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் தன்னை கைது செய்ய எடுக்கப்படும் முயற்சிகளுக்கு தடை விதிக்குமாறு கோரி அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர், முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா ஊடாக அவர் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ளார்.

சி.ஐ.டி. எனப்படும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின், விசேட விசாரணைப் பிரிவு இலக்கம் 3 விசாரணை அறையின் பொறுப்பதிகாரி ரவீந்ர விமலசிறி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி, அதன் பணிப்பாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் நுவன் வேதசிங்க, பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்ன மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாக பெயரிட்டே, இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவினை றிசாத் பதியுதீன் தாக்கல் செய்துள்ளார்.

குறித்த மனுவில், உருவாக்கப்பட்ட சாட்சிகளை மையப்படுத்தி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அடிக்கடி மேற்கொள்ளப்படும் விசாரணைகளாலும் கைதுக்கான முயற்சிகளினாலும் தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெரும் சிக்கல்கள் தனக்கு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் தலைவர் என்ற வகையில், இன்றைய தேர்தல் சூழலில் பல வேலைப்பாடுகள் உள்ளன. அடிக்கடி என்னைக் கைது செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவது, உள ரீதியாகத் தன்னைச் சோர்வடைய வைத்துள்ளது.

மேலும், தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே எஞ்சியுள்ளதால், பல கூட்டங்களிலும் பங்கேற்க வேண்டியுள்ளது.

இதற்கு முன்னரும் அடிக்கடி என்னை விசாரணைக்கு அழைத்தனர். கடைசியாக பத்து மணி நேரம் நான் விசாரிக்கப்பட்டேன்.

இவ்வாறான செயற்பாடுகளால் எனது பெயருக்கும் களங்கம் ஏற்படுத்தப்படுவதாகவே நான் உணர்கிறேன். எனவே, இந்தக் கைது முயற்சிகளைத் தடுத்து நிறுத்த உயர் நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக வாணிபத்துறை அமைச்சராக இருந்த காலத்தில், கைத்தொழில் அபிவிருத்தி சபையூடாக "கொலொஸஸ்" நிறுவனத்திற்கு செப்பு விநியோகித்தமை தொடர்பில் அப்போது அமைச்சின் கீழ் இருந்த நிறுவனமொன்றின் நடவடிக்கைகளை மையப்படுத்தி இக் கைது முயற்சிகள் இடம்பெறுகின்றன.



எனவே இந்த மனு மீதான விசாரணைகள் நிறைவடையும் வரை இந்த விவகாரத்தில் என்னை கைது செய்வதற்கு இடைக்கால தடை உத்தரவொன்றினை பிறப்பிக்க வேண்டும்.

அத்துடன் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்புவதுடன், தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக அறிவிக்குமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது. அத்துடன் 5 கோடி ரூபா நட்டஈடும் கோரப்பட்டுள்ளது. (ஐ-4)

## விசேட சுற்றிவளைப்பு 376 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பல்வேறு குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடைய 376 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மேல் மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் காரியாலயம் குறிப்பிட்டுள்ளது.

இதன்போது ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த 171 பேரும் கஞ்சா வைத்திருந்த 78 பேரும் சட்டவிரோத மதுபானம் மற்றும் ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருளுடன் 127 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாணத்தினுள் முகக்கவசம் அணியாமல் இருந்த 2 ஆயிரத்து 164 பேர் பொலிஸாரினால் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சமூக இடைவெளி பேணப்படாமை தொடர்பில் ஆயிரத்து 765 பெயர் எச்சரிக்கப்பட்டு உள்ளதாக மேல் மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் காரியாலயம் குறிப்பிட்டுள்ளது. (ஐ-4)

கண்கள் உறங்கலாம்,
கனவுகள் உறங்கக்கூடாது.
– அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## 'பிராப்தம்' என்பதன் பொருள் உணர்மினே!

விதியை வெல்லுவேன் என்று ஒருவன் கர்ச்சிப்பானாயின் அதுவும் விதியே என்கிறார் கவியரசு கண்ணதாசன்.

தா... தா... தா... தா...தா... தா...
தா... க்குறைக்கு
என் செய்வேன் என்பார் வி.கல்யாண சுந்தரனார்.

ஏழு தடவைகள் தா என்ற சொல்லை கூறுவதன் மூலம் எழுதாக்குறைக்கு என் செய்வேன் எனப் பொருள் தரப் பாடி நிற்பார் அவர்.

இதனையே வள்ளுவர் ஊழ்வினை என்று உரைக்கிறார். ஊழ்வினை பற்றிய வள்ளுவரின் உரைப்பை யார்தனிலும் மறுத்துரைக்க முடியாது.

கடவுள் இல்லை, விதி என்றொன்று இல்லை என்று உரக்கக்கூறிய பேரறிஞர் அண்ணாதுரை, கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் திருக்குறளை தங்களின் உயிராக மதித்தனர்.

ஆக, ஊழ்வினை என்ற விடயம் எளிதில் தூக்கி எறியப்படக்கூடியதன்று.

தவிர, அனுபவிப்புப் பற்றி உரைத்த வள்ளுவன்
வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது
என்றார்.

இக்குறளுக்கு விளக்கம் கொடுத்த திருமுருக கிருபானந்தவாரியார்; மிகப்பிரமாண்டமான சர்க்கரைக் கம்பனி வைத்திருக்கும் முதலாளி ஒரு சிறு சர்க்கரையையேனும் சாப்பிட முடியாது. அந்தளவுக்கு அவருக்கு சர்க்கரை வியாதி.

இதுதான் வகுத்தான் வகுத்த வகை என்று உதாரணம் காட்டுவார்.

இவை எல்லாம் ஒருபுறம் இருக்க, பிராப்தம் என்பது பற்றி இங்கு கூற வந்ததன் நோக்கம் என்ன என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

கன்மவினை, ஊழ்வினை, விதிப்பயன் என்பவற்றின் ஒட்டுமொத்தமே பிராப்தம் ஆகும்

பிராப்த வினைப் பயனை அனுபவித்தே ஆக வேண்டும். அதிலிருந்து எவரும் மீள முடியாது என்பது பிராப்தத்துக்குப் பொருள் உரைத்த வேத விற்பன்னர்களின் முடிவு.

இங்கு பிராப்தவினை பற்றிச் சிந்திக்கும் போதெல்லாம் எங்கள் தமிழினத்தின் தலைவிதியே நினைவுக்கு வரும்.

ஆம், எம் இனம் செய்த தியாகங்கள், அர்ப்பணிப்புகள், இழப்புகள், இவற்றுக்கான கிடைப்பனவுகள் என்பவற்றை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

செய்த தியாகங்களை மறக்கின்ற அளவில் நம் நிலைமை வந்துவிட்டது. தமிழ் அரசியல் என்றாலே தமிழ் மக்களுக்கு வெறுப்பாயிற்று.

இதுதான் என்றால் இல்லை. வாக்களிப்பதா? வாக்களிப்பதென்றால் யாருக்கு வாக்களிப்பது என்று இதுவரையும் சிந்திக்காமல் நம்மில் பலர் இருக்கிறோமென்றால், எங்கள் இனம் மீளமுடியாத அளவில் நம்மை மாயை எனும் இருள் ஆட்கொண்டுள்ளது.

இங்குதான் பிராப்தம் பற்றி நினைக்கத் தோன்றும்.

பிராப்தம் முடிகின்ற காலத்தில் அவதாரம் எழுந்து வரும்.

# தேசிய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு வடக்கில் இராணுவக் குறைப்பு மேற்கொள்ளப்படலாம்

## யாழில் இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் தேவையேற்பட்டால், வடக்கில் இராணுவக் குறைப்பு மேற்கொள்ளப்படலாம் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

யாழில் நேற்று சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, அவர் மேலும் தெரிவிக்கையில், "யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தால் முடிந்தளவிலான காணிகளை நாம் விடுவித்துள்ளோம். இப்போது இராணுவத்தால் பயன்படுத்தப்பட்ட 10இற்கு 2 வீதமான காணிகளே எஞ்சியுள்ளன.

சில இடங்களில் பாதுகாப்பு காரணங்களைக் கருத்திற்கொண்டு முகாம்களை அப்படியே வைத்துள்ளோம். இந்த முகாம்களை எதிர்காலத்திலும் அகற்ற மாட்டோம்.

ஏனெனில், எந்தவொரு நாட்டிலும் பாதுகாப்புக்காக இராணுவ முகாம்கள் இருப்பது வழமையாகும்.

எனினும், சிறியளவிலான இராணுவத்தினரே இங்கு உள்ளார்கள். எதிர்காலத்தில் தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு, தேவையேற்பட்டால் ஏனைய காணிகளை விடுவிக்கவும் நாம் நடவடிக்கை எடுப்போம்.

சிலர் இராணுவம் தொடர்பாக தவறாக பேசுகிறார்கள். இது ஜனநாயக நாடு என்பதால், அனைவருக்கும் கதைக்க உரிமையுள்ளது.

ஆனால், ஒரு கருத்தை வெளியிடும்போது, அது சரியா- தவறா என்பதை ஆராய்ந்து வெளியிடுவதே மூளையுள்ள மனிதனுக்கு அழகாகும்.

வடக்கிலுள்ள தமிழர்களுக்கு இராணுவம் தொடர்பாக நன்றாகத் தெரியும். நாம் இவர்களுக்கு எவ்வாறான சேவை செய்துள்ளோம் என்பதை மக்கள் அறிவார்கள்.

நாம் தேசிய பாதுகாப்புக்காகத் தான் செயற்படுகிறோம். எமது செயற்பாடுகள் வெறும் வாய் வார்த்தையாக இருக்காது என்பதை மக்கள் அறிவார்கள்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# அடிப்படைவாதிகளுடன் கூட்டணியமைக்க மாட்டோம்

## கம்மன்பில திட்டவட்டம்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை பெற்றுக் கொள்வதற்காக மத அடிப்படைவாதிகளுடன் ஒருபோதும் கூட்டணியமைத்துக் கொள்ளமாட்டோம். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மக்கள் மத்தியில் வழங்கிய வாக்குறுதிகளை முழுமையாக செயற்படுத்த அமைச்சர் விமல் வீரவன்சவுடன் இணைந்து தொடர்ந்து குரல்கொடுப்பேன் என பிவிதுறு ஹெலஉறுமய அமைப்பின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இஸ்லாமிய அடிப்படைவாதம் ஒழிப்பு, தேசிய பாதுகாப்பு, இனத்துக்கு முக்கியத்துவம் மற்றும் அனைத்து இன மக்களும் பொதுவான சட்டத்திற்கு அடிபணிய வேண்டும் என்ற விடயங்களை இடம் பெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் எமது கொள்கையாக வெளியிட்டோம். கடந்த அரசாங்கத்தில் அடிப்படைவாதத்திற்கு அரச பாதுகாப்பு வழங்கப்பட்டது. இதனால் பாரிய விளைவுகள் ஏற்பட்டன.

இடம் பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மையின மக்கள் இவ்விடயங்களை கருத்திற் கொண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். இந்த வாக்குறுதிகள் அனைத்தும் பொது ஜன பெரமுன தலைமையிலான புதிய அரசாங்கத்தில் நிறைவேற்றப்படுமா? என்ற கேள்வியை மக்கள் தற்போது எழுப்புகிறார்கள்.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் எமது நாட்டில் புரையோடியுள்ள இஸ்லாமிய அடிப்படை வாதத்தை பகிரங்கப்படுத்தியது. குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் அப்போதைய அரசாங்கத்தினால் பாதுகாக்கப்பட்டார்கள். எமது ஆட்சியில் இவர்கள் நிச்சயம் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார்கள்.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் 69 இலட்ச மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை புதிய அரசாங்கத்தில் உறுதியாக செயற்படுத்த அமைச்சர் வீரவன்சவுடன் இணைந்து குரல்கொடுப்பேன் என்பதை மக்கள் மத்தியில் குறிப்பிட்டுக் கொள்கிறோம். அடிப்படை வாதிகளின் நிபந்தனைகளுக்கும் அடி பணிய மாட்டோம் என்றார். (ஐ-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை


**யாழ்.பிரதேசத்தில்** மண்டான் பிரதேசம், அண்ணா சிலையடி, கள்ளுவம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** பத்தினியார் மகிழங்குளம் கிராமம், அரசடிகுளம், காந்திநகர் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

தோல்விக்குத் துணை சோர்வும் சோம்பலும்;
வெற்றிக்குத்துணை வீரமும் தீரமும். -ஔவையார்

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ இயேசுகிறிஸ்து கெத்சமனே தோட்டத்தில் முகங்குப்புற விழுந்து பிதாவை நோக்கி ஜெபித்தார். மனுக்குலத்தின் இரட்சிப்பின் திட்டத்தை தம்முடைய மரணத்தினாலே நிறைவேற்ற வந்தவர்." "இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்" என்று ஜெபித்தார். அந்த ஜெபம் கேட்கப்படவில்லை. ஆகவே, "உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது." என்று தம்மை ஒப்புவித்தார்.

❖ ஆனாலும், இரண்டாம் முறையும் அப்படியே ஜெபித்தார். அப்போதும் கேட்கப்படவில்லை. மீண்டும் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். மூன்றாம் தரமும் அப்படியே ஜெபித்தார். பதிலில்லை. முற்றுமாக, பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

❖ அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான். இரட்சிப்பின் திட்டத்தை செய்து முடித்தார்.

❖ "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்கு செவிமடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்" (யோவா 5:14) என்கிறது பைபிள்.

# கொரோனாவும் அரசின் தேர்தல் காரணியாகி விட்டது

## சுஜீவ குற்றச்சாட்டு



(கொழும்பு)

**இனவாதத்தின் ஊடாக தேர்தலை வெற்றிகொண்ட ராஜபக்ஷக்கள் , கொரோனா வைரஸ் பரவல் காரண மாக நாடு எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் தேர்தலை வெற்றி கொள்ளவே முயற்சித்து வருகின்றார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி பொதுச்செயலாளர் சுஜீவ சேனசிங்க குற்றஞ்சாட்டினார்.**

சிங்கள பௌத்தம் என்பது தமிழ், முஸ்லிம் மக்களை கொலை செய்து கடலில் எறிவது அல்ல மாறாக அவர்களும் தங்களைப் போன்று வாழ்வதற்கான சமமான சூழலை ஏற்படுத்திக்கொடுப்பதே என்று தெரிவித்த அவர் , இவ்வாறான குணம் கொண்ட சிறந்த சிங்கள பௌத்த உறுப்பினர்கள் தங்களுடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

கொவிட் -19 வைரஸ் பரவல் தொடர்பில் மீண்டும் அச்சம் எழுந்துள்ளது. முதல் கட்டத்தை விட இரண்டாம் கட்டத்தில் பாதிப்புகள் அதிகரிக்குமோ என்ற பயம் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது. இந்நிலையில் இதனால் நாட்டு மக்களுக்கு உயிர் ஆபத்துகள் எதுவும் ஏற்பட்டால் அதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ , பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, சுகாதார சேவைகளின் பிரதானி , தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட அனைவருமே பொறுப்புக்கூற வேண்டும். இதேவேளை கொலைக் குற்றத்தின் கீழ் நாட்டு மக்கள் இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவும் முடியும்.

அரசாங்கத்தினர் இராணுவத்தினரை காண்பித்தே தொடர்ந்தும் தேர்தலை வெற்றி கொள்ள முடியாது என்பதனால் கொரோனா நெருக்கடியின் மத்தியில் தேர்தலை வெற்றி கொண்டு ராஜபக்ஷக்கள் என்ற விருட்சத்தை மேலும் வளர்ச்சிப் பெறசெய்ய முயுற்சித்து வருகின்றனர். இம்முறை தேர்தலில் ராஜபக்ஷக்களின் குடும்பத்தைச் சேர்ந்த பெருந்தொகையானோர் போட்டியிடுகின்றனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் , பாதுகாப்பு அமைச்சர், பொருளாதார அமைச்சர் மற்றும் சபாநாயகர் ஆகியோர் பதவி வகிக்கும் முதல் நாடு இலங்கையே. இந்த நிலைமையை எண்ணி நாம் தலைகுனிய வேண்டும். இது ஒரு அடிமைத்தனமாகும். அரச குடும்பங்களின் ஆட்சிகள் இடம்பெறும் நாடுகளில் கூட எல்லா பதவிகளையும் அவர்களே வகிப்பதில்லை. இந்த நிலைமைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே பொறுப்புக்கூற வேண்டும். அவர்தான் ராஜபக்ஷக்களின் குடும்பத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவர்.

தற்போது சாரதி அனுமதிப் பத்திரம் அச்சிடுவதையும் இராணுவத்திடம் ஒப்படைக்க போகின்றனர். இதுவும் இராணுவ ஆட்சிக்கான முயற்சி தான்.

மக்களை ஏமாற்றுவது இலகுவானது என்றாலும் , தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது. யுத்தத்தை வெற்றி பெற்றதாகவே ராஜபக்ஷக்கள் பெருமை கொள்கின்றனர். ஆனால் ஒவ்வொரு நாளும் இரத்தத்தை சாப்பிட்டு உயிர்வாழ முடியுமா? சிங்கள பௌத்தம் என்று இனவாதத்தை போசித்து வந்தார்கள். அதே சிங்கள பௌத்தத்தை மதிக்கும் பல உறுப்பினர்கள் எம்முடனும் இருக்கின்றார்கள். சிங்கள பௌத்த குணம் என்பது இந்நாட்டு மக்கள் அனைவரையும் வாழவைப்பதே தவிர , தமிழ், முஸ்லிம் மக்களை கொலை செய்து கடலில் எறிவது அல்ல.

சிங்கள பௌத்த மக்களுக்கு முன்னுரிமை கொடுப்பதுடன் ஏனைய , இனத்தவர்களும் சமமான முறையில் வாழுவதற்கான சூழலை நாங்கள் ஏற்படுத்திக் கொடுப்போம் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# புராதன கட்டடங்களை இடிப்பவர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுங்கள்



## சம்பிக்க வலியுறுத்து

(குருநாகல்)

குருநாகல் பகுதியில் புராதன சிறப்புரிமை மிக்க கட்டடத்தை இடித்து சேதமாக்கியமைக்கு கடும் கண்டனம் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, இதனுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கம் நாட்டின் பெறுமதி மிக்க இடங்களை விற்பனை செய்து அதில் கிடைக்கப் பெறும் பணத்தை கைப்பற்றுவதையே நோக்காக கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் குருநாகல் பகுதியில் புராதன சிறப்பு மிக்க மண்டபமொன்று இடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கடந்தகால ஆட்யின் போது கொழும்புப் பகுதிகளில் காணப்பட்ட சிறப்புமிக்க இடங்கள் விற்பனை செய்யப்பட்டதுடன், அந்த இடங்களில் ஹோட்டல்கள் கட்டப்பட்டுள்ளன.

தற்போது இந்த நிலைமை குருநாகலிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் உடனடியாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்ட போதிலும் உரிய நேரத்தில் சம்பவ இடத்திற்கு சென்று அவர்கள் விசாரணைகளை நடத்தவில்லை என்று தெரியவந்துள்ளது. அது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவின் பேச்சுக்கு கட்டுப்பட்டே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ செயற்பட்டு வருகின்றார்.

இவர்கள் இருவரினதும் அரவணைப்பில் இருப்பவர் தான் குருநாகல் நகரசபையின் தலைவர். அவருக்கு தெரியாமல் இந்த கட்டடத்தை இடிப்பது என்பது சாத்தியமற்றதே. அதனால் இது தொடர்பில் அவரிடம் விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்டநடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இதேவேளை இதற்கு எதிராக அஸ்கிரிய -மல்வத்து பீடத்து மாநாயக்க தேரர்கள் தங்களது கருத்தை தெரிவிப்பதுடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திற்கு வலியுறுத்த வேண்டும்.

எமது ஆட்சிக்காலத்திலே இவ்வாறு வரலாற்றுச் சிறப்பு மிக்க சமயஸ்தலங்கள் மற்றும் விகாரைகளின் வளர்ச்சிக்காக பெரும் பங்காற்றியுள்ளோம்.

எங்களை கைதுசெய்வதற்கு குறுகிய காலத்திற்குள் நடவடிக்கை எடுத்த அரசாங்கம் புராதன சிறப்பு மிக்க கட்டடமொன்றை இடித்துள்ள நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஏன்? என சம்பிக்க கேள்வி எழுப்பினார். (ஜ-2)

# தொல்பொருள் சின்னங்களுக்கு சேதம் ஆராய பிரதமரால் குழு நியமனம்

(குருநாகல்)

13ஆம் நூற்றாண்டில் குருநாகல் இராச்சியத்திற்கு சொந்தமான தொல்பொருள் மதிப்பு மிகுந்த கட்டடங்களுக்கு சேதம் விளைவிப்பது தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தியுள்ளார்.

இந்த தொல்பொருள் மதிப்பு மிகுந்த கட்டடங்களுக்கு சேதம் விளைவிப்பது தொடர்பில் உடனடியாக ஆராயுமாறு பிரதமர் கலாசார அமைச்சர் என்ற வகையில் கலாசார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

அதற்கமைய இந்த தொல்பொருள் தளத்திற்கு சேதம் விளைவிப்பது தொடர்பில் ஆராய்வதற்கு பௌத்த சாசன அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிஸ் சந்திரவினால் விசேட நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குழுவின் தலைவராக தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திஸாநாயக்க செயற்படவுள்ளதுடன், குருநாகல் மாவட்ட செயலாளர் ஆர்.எம்.ரத்நாயக்க, தொல்பொருளியல் பேராசிரியர் டி.பீ.குலதுங்க, கலாசார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் பிரசாத் ரணசிங்க, கலாசார நிதியத்தின் பணிப்பாளர் கட்டடக் கலைஞர் சுமேதா மாதொட ஆகியோர் இந்த குழுவில் உள்ளடங்கும் அங்கத்தவர்கள் ஆவதுடன் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னதாக இது குறித்த அறிக்கையை சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# 901 கடற்படையினர் குணமடைவு

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 2 கடற்படையினர் பூரண குணமடைந்து வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

இதன்மூலம் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி குணமடைந்த கடற்படையினரின் மொத்த எண்ணிக்கை 901ஆக உயர்ந்துள்ளது.

இந்நிலையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 906 கடற்படையினரில் 5 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாட்டில் கொரோனாத் தொற்றினால் மொத்தமாக 2ஆயிரத்து 697 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களில் 2 ஆயிரத்து 12 பேர் குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## மட்டுப்படுத்தப்...

உள்ள ஆலயங்களுக்கு உள்ள விதி முறைகளைப் போலவே நல்லூர் ஆலயத் திருவிழாவிற்கும் விதிமுறைகள் பின்பற் றப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று சனிக் கிழமை விஜயம் செய்த இராணுவத் தள பதியிடம் நல்லூர் உற்சவ காலத்திற்கு மக்களை அனுமதிப்பதற்கான பொறி முறைகள் தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியுடன் கலந்துரையாடி சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கோயிலுக்கு வரும் அடியவர்கள் அனைவரும் கட்டாய மாக முகக் கவசம் அணிய வேண்டும். அனைத்து மாவட்டங்களிலும் இந்த நடை முறை பின்பற்றப்படவுள்ளது. எனினும் நல்லூர் ஆலயத்தைப் பொறுத்தவரை உலகப் பிரசித்தி பெற்ற ஒரு கோயில் என் பது அனைவரும் அறிந்ததே.

அதேபோல் எல்லா இடங்களிலிருந்தும் அடியவர்கள் கோயிலுக்கு வருவதனால் சில கட்டுப்பாடுகளை விதிப்பதற்குத் தீர் மானித்துள்ளோம். எனவே அதனைப் பின்பற்றி திருவிழாவை நடத்த மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியிடமும் கூறியுள்ளேன் என்று தெரிவித்தார். (ம-3)

## பாடசாலை...

அதன்படி பாடசாலைகள் மீண்டும் ஜுலை 27ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கல்வியமைச்சு வெளியிட்ட அறிக்கை யில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜுலை 27ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கும் வாரத்தில் 11, 12 மற்றும் 13 ஆம் வகுப்பு மாணவர்கள் மட்டுமே பாட சாலைக்கு வர வேண்டும்.

தேர்தல் முடிந்த பின்னர் ஓகஸ்ட் 10, திங்கட்கிழமை பாடசாலைகளின் ஏனைய வகுப்புக்களை ஆரம்பிக்க பொருத்தமான நேரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க கல்வியமைச் சிற்கு பரிந்துரைத்துள்ளார்.

இருப்பினும், ஓகஸ்ட் 10 ஆம் திகதிக்கு முன்னர் ராஜாங்கனை மற்றும் வெலிகந்த கல்வி வலயங்களில் எந்த பாடசாலை களையும் திறக்க வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட மாகாண அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பெரும்பான்மையான மாண வர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக் கைகளை பரிசீலித்த பின்னர், க.பொ.த. உயர்தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட் சைக்கான திகதிகளை திங்கட்கிழமை (ஜுலை 20) அறிவிக்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. (ம-3)

## இராணுவத்தை...

னால் அங்கீகரிக்கப்பட்ட இராணுவ மய மாக்கத்திற்குள் சென்று பல ஆண்டுகள் கடந்துவிட்டன.

குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் இராணுவத்தை மீறி கல்வி, நிர்வாகம், அபிவிருத்தி என எதனையும் செய்யமுடி யாத நிலைதான் நீடிக்கின்றது.

அதன் மொத்த விளைவைத்தான் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும் சட்டத் தரணியுமான கலாநிதி குமாரவடிவேல் குருபரன் விடயத்தில் நடந்தது.

சட்டத்தரணி குருபரன் பல்கலைக் கழகத்தில் பணியாற்ற முடியும். ஆனால் நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்ட தமிழருக்காக வாதாட முடியாது. இது நீதி நியாயத்திற்கு எதிரானது.

பேராசிரியர் பீரிஸ் சட்டப் பள்ளியில் கற் பித்தபோது, அவர் நீதிமன்றத்தில் பல வழக்குகளில் ஆஜராகி இருந்ததை நாம் அனைவரும் நினைவில் கொள்ள வேண் டும்.

அரசாங்கத்தால் திருத்தப்பட்ட அல்லது புதிதாக உருவாக்கப்பட்டது தொடர்பாக பல் கலைக்கழக பேராசிரியர்களுக்கு மட்டுமே நன்றாகத் தெரியும். அது மட்டுமல்லாது உலகின் பிற பகுதிகளில் நீதிமன்றத்தில் ஒரு முக்கியமான சட்டவாதத்தை விவா திக்க வேண்டியிருக்கும் போது, அவர்கள் சட்ட பேராசிரியர்களைத்தான் அழைத்து வருகிறார்கள். மேலும் புதிய சட்டத்தை எவ்வாறு விளக்குவது என்பது பல்கலைக் கழக பேராசிரியர்களுக்குத்தான் தெரியும்.

இதேவேளை, பாராளுமன்றத் தேர்த லில் தமிழர்கள் அனைவரும் ஒருமித்து செயற்படவேண்டிய சூழல் உருவாகியுள் ளது. அத்துடன், படித்த விலை போகாத தலைமைகளை நாம் முன்கொண்டுவர வேண்டும்.

அதற்கான மக்கள் ஆதரவு தற்போது வந்துள்ளது. மாற்றம்தான் தமிழர்களுக் கான தீர்வாக அமையும்" என்று குறிப்பிட் டுள்ளனர். (ம-3)

## கட்சி ஆதரவாளர்...

இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வரு வதாவது,

கட்சியொன்றின் யாழ்.மாவட்ட முத ன்மை வேட்பாளரின் ஆதரவாளர்கள் மட்டுவில் பகுதிக்கு சென்று வரும் போது மட்டுவில் தெற்கு ஊர் எல்லைப் பகுதியில் வழி மறித்த குழுவொன்று அவர்கள் மீது இரும்புக் கம்பிகளால் தாக்குதல் நடத்தி யுள்ளது.

இதன்போது அக்கட்சியின் ஆதரவாளர் களின் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு அடித்து சேதமாக்கப்பட்டதுடன், ஒருவரின் மூன்று பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலி ஒன்றும் அறுத்துச் செல்லப்பட்டி ருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத் தாக்குதல் சம்பவத்தில் கட்சி ஆதரவாளர்கள் இருவர் உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது தொடர்பாக வழங்கப்பட்ட முறைப் பாட்டினை அடுத்து யாழ் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் கைதாகி இருப்பதாகத் தெரிய வருகிறது.

இது தொடர்பான மேலதிக விசா ரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,30)

## கொரோனா...

நேற்றைய தினம் புங்குடுதீவில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீட்டு திட்டத்தினை திறந்து வைத்த பின் உரை யாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்பொழுது இலங்கையில் கொரோனா நோய் முற்றாக நீங்கி விடவில்லை.

நான் வடக்கு மக்களுக்கு ஒரு கோரிக் கையை முன்வைக்க விரும்புகின்றேன். நீங்கள் சுகாதார அமைச்சினால் வெளி யிடப்படும் சுகாதார நடைமுறைகளை கட்டாயமாக பின்பற்ற வேண்டும். அதிலும் குறிப்பாக நீங்கள் முகக்கவசம் அணிந்து கட்டாயம் வீதிகளில் பயணிக்க வேண்டும்.

அதேபோல் நீங்கள் கைகளை நன் றாக கழுவி உங்களுடைய சுகாதார நடை முறைகளை பேணுவது அவசியமாகும். ஏனெனில் இலங்கையில் இருந்து இன் னும் கொரோனா முற்றாக நீங்கவில்லை என்றார். (ம-3)

## 6 இலட்சத்தை...

சர்வதேச ரீதியில் கொரோனா தொற் றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண் ணிக்கையானது 6 இலட்சத்தை கடந்துள் ளது.

இதுவரையில் வெளியான தகவல் களின் அடிப்படையில் உலகலாவிய ரீதி யில் கோவிட் - 19 வைரஸ் தொற்றுக்குள் ளாகி 600,132 பேர் மரணித்துள்ளனர்.

இதில் அதிகளவான மரணங்கள் அமெரிக்காவில் பதிவாகியுள்ளதோடு, அங்கு 142,065 ஆக காணப்படுகிறது.

பிரேசிலில் மொத்தமாக 77,964 பேர் குறித்த வைரஸ் காரணமாக பலியாகி யுள்ளனர்.

இந்நிலையில், சர்வதேச ரீதியில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 14,221,399ஆக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கல்வியின் சுயா...

முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி குருபரனின் இராஜினாமா எடுத்துக் காட்டு வதாக தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரன் கவலையும் விமர்சனமும் தெரிவித் துள்ளார்.

கிளிநொச்சி முறிகண்டியில் உள்ள சாந்தபுரத்தில் நேற்று சனிக் கிழமை நடை பெற்ற தேர்தல் பிர சார கூட்டம் ஒன் றில் இவ்வாறு தெரிவித்த விக்னேஸ்வரன், இதேபோன்ற ஒரு நிலைமைதான் யாழ் பல்கலைக்கழக உபவேந்தராகப் பதவி வகித்திருந்த பேரா சிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன் திடீரென பதவி விலக்கப்பட்டபோதும் நடைபெற்றி ருந்தது என்றும் தெரிவித்துள்ளார். (ம-3)


# வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் சைவ உணவகம் ஒன்றுக்கு கீழ்வரும்
**வேலையாட்கள் தேவை**
(கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிட வசதியுடன்)



1. உணவு பரிமாறுபவர்கள் (ஆண்,பெண்)
2. ரொட்டி வேலை
3. தோசை போடுபவர்
4. சமையல் உதவியாளர்
5. சமையலாளர்
6. அரையல் வேலையாளர்
7. சுத்திகரிப்பாளர்

தொடர்புகளுக்கு:-
077 791 7753
021 568 1660

(3352)



ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 18-07-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1038
Z 5 8 5 0 2 0

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 18-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2482
U 16 25 28 69

மஹஜன சம்பத
திகதி 2020/07/18
சீட்டிழுப்பு இலக்கம் 4187
L 2 9 3 7 0 0

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/07/18 சீட்டிழுப்பு இலக்கம் 1518
சுப்பர் இலக்கம் 04 வெற்றி இலக்கங்கள் 04 39 48 54
2nd இலக்கங்கள் 0 3 0

மெகா பவர்
திகதி 18/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 554
N 11 14 20 71 80

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1177
சீட்டிழுப்பு திகதி 18.07.2020 நீலம்
D 27 39 53 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,501,660
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2865 வர்ணம் இளம் நீலம் திகதி 18.07.2020
வெற்றி இலக்கங்கள் 03 18 31 58 இடபம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,836,082
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 984 வர்ணம்: மஞ்சள் சீட்டிழுப்பு திகதி: 2020.07.18
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,078,650/-
வெற்றி இலக்கங்கள் 17 26 56 74 W

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3339 திகதி: 2020.07.18
பச்சை சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 22 28 29 53 A
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 33,560,127.50/-

## தமிழ் மக்களின் விடியலை நோக்கிய பயணம்




## பருத்தித்துறையில் வணிக கட்டடம் விற்பனைக்கு

இரண்டு திரையரங்கு, இரண்டு திருமண மண்டபத்துடன் 6 பரப்பு காணியில் வீதியோரமாக அமைந்துள்ளது.

- 50771 சதுர அடிகளைக் கொண்டது.
- சாப்பாட்டுக்கடை ( Restaurant உள்ளது).
- மின் தூக்கி வசதியைக் கொண்டது.

(3349)

தொடர்புகளுக்கு : 077 566 0000

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979, 7ல் செவ்வாய், அவிட்டம் 4ம் பாதம், பாவக்கிரகம் 45, முகாமைத்துவ உதவியாளராக கடமை யாற்றுபவருக்கு பொருத்தமான மணமகனைத் தேடுகின்றோம்.

தொடர்புகளுக்கு

077 614 0311

(C-9916)

## காணிகள் வீடுகள் விற்பனைக்கு

- கல்வியங்காட்டில் 19 Ph காணியுடன் வீடு விற்பனைக்கு.
- மானிப்பாயில் 1/2 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு.
- 1 1/2, பரப்பு காணி தாவடியில் விற்பனைக்கு.
- வசாவிளானில் 15 பரப்பு காணி விற்பனைக்கு.
- இயக்கச்சியில் A9 வீதி ஓரமாக 6 பரப்பு காணி விற்பனைக்கு.
- கீரிமலையில் 87 பரப்பு காணி விற்பனைக்கு.
- 5 1/4, பரப்பு காணியுடன் கைதடியில் வீடு விற்பனைக்கு.
- சங்கானையில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு.
- இயக்கச்சியில் 60 ஏக்கர் காணி விற்பனைக்கு.
- தையிட்டியில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு : 077 566 0000 (3349)

## மணமகள் தேவை

யாழ். இந்து 1985 இல் அனுச நட்சத்திரத்தில் பிறந்த A/L படித்த 12 வருடமாக பிரான்சில் சுயதொழில் புரியும் மணமகனுக்கு 1986 - 1992 பிறந்த படித்த சைவ போசன அழகிய மணமகள் தேவை. பிரான்சில் வசிப்பவர்களும் பிரான்சிற்கு சென்று வசிப்பதற்கு சம்மதிப்பவர்களும் தொடர்பு கொள்ளவும். (3296)

077 572 4306

## காப்புக்கருவிகள் மற்றும் சாதனங்கள்




3PLY Mask- 25/- 5PLY KN95 Mask- 275/- Child KN95 Mask- 360/-



| Hand Sanitizer Gel,Liquid | High Quality Hand Wash | Disinfectant Liquid |
|---|---|---|
| 50ml. 165/- | 200ml. 175/- | 1Litter.750/- |
| 100ml. 265/- | 500ml. 245/- | 3Litter.2200/- |
| 200ml. 375/- | 1Litter. 350/- | 5Litter.3600/- |
| 500ml. 485/- | 4Litter. 1100/- | condition apply |
| 5Litter. 3950/- | | |



NORTH LEAD DISTRIBUTORS #253, Stanly Road, Jaffna

அழையுங்கள் 0774192275 0772533390 (C-9914)

## வேலை வாய்ப்பு

எமது World Entrepreneurs Company ஆனது 3வது தடவையாக 50 பேருக்கு வேலை வாய்ப்பினை வழங்கும் நோக்குடன் களமிறங்கியுள்ளது. இவ் 50 பேரின் தேர்வானது 05 மாவட்டங்களில் இருந்து தலா 10 பேர் என்ற அடிப்படையில் விண்ணப்பிக்கமுடியும். ஆர்வம் உள்ள ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். (3348)

**பதவி வெற்றிடங்கள்**

- முகாமையாளர் - A/L Pass
- உதவி முகாமையாளர் - A/L
- கணக்காளர் - A/L, O/L
- விற்பனைப் பிரதிநிதி - தரம் 10
- அலுவலக உத்தியோகத்தர் - A/L, O/L

உங்கள் பதிவுகளை மேற்கொள்ள 076 267 8131 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 076 711 8479 , 077 144 0786

## இந்தியத் துணைத்தூதரகம் யாழ்ப்பாணம்

### மோட்டார் வண்டியை பகுதிகளாக்கி இரும்புக் கழிவுகளையும் அதன் உதிரிப்பாகங்களையும் விற்றல்

இந்தியத் துணைத்தூதரகத்தின் அலுவலகப் பயன்பாட்டில் இருந்த குண்டு துளைக்காத மோட்டார் வண்டி **BMW Model X5, Petrol, 4395.00CC** இயந்திர வலுவுடைய கறுப்பு நிற மோட்டார் வண்டி கழிவுகளாக **(Scrap)** விற்கப்படவுள்ளது. வாகனத்தை நீங்களே வெட்டி இரும்புக் கழிவுகளையும் அதன் உதிரிப்பாகங்களையும் பெற்றுக் கொள்வதற்குமான தங்களால் வழங்கக் கூடிய அதிகூடிய விலைக்கான கோரல்களை விருப்பமுள்ளவர்கள் சமர்ப்பிக்கலாம்.

(**குறிப்பு:-** தெரிவு செய்யப்பட்ட கொள்வனவாளர் மேற்படி பாகங்களுக்கான (கழிவு இரும்பு விலைக்கான) செலுத்தப்பட வேண்டிய சுங்கவரி மற்றும் வரிகளை செலுத்த வேண்டும். எனவே விண்ணப்பதாரிகள் த்ங்களால் செலுத்தக் கூடிய அதிகூடிய பெறுமதியை வரிகள் நீங்கலாக குறிப்பிட வேண்டும்.)

விண்ணப்பப்படிவங்களை மூடிய காகித உறையினுள் இட்டு, "மோட்டார் வண்டியை பகுதிகளாக்கி நீக்குதல்" என்று தலைப்பிட்டு,

**நிர்வாக அதிகாரி,**
**இந்தியத் துணைத் தூதரகம்,**
**14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு 10 ஓகஸ்ட் 2020 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

விலைக்கோரலுக்கு முன்பதாக மோட்டார் வண்டியைப் பார்வையிட விரும்புபவர்கள் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். 076 927 7778 என்ற கைபேசிக்கு அழைப்பதன் மூலமாகவோ. அல்லது **admn. jaffna@mea.gov.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சலை அனுப்புவதனூடாகவோ வாகனத்தை பார்வையிடுவதற்கான முன் அனுமதிகளை பெற்றுக் கொள்ளலாம்.

**கூறுவிலைகள் சமர்ப்பித்தோர் 12.08.2020 அன்று 10 மணிக்கு தூதரக வளாகத்திற்கு அவர்கள் முன்னிலையில் உறைகளைத் திறக்க அழைக்கப்படுகிறார்கள்.**

**குறிப்பு:-** இறுதி முடிவுகள் அனைத்தும் விற்றலுக்கான தூதரக குழு தீர்மானிக்கும்.

(C-9907)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 03 - 04 - 1977



ஆண்டவன் மடியில் 01 - 07 - 2020

### திருமதி சுதர்சனா ரவிபாஸ்கரன்

தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டன் Wembley ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுதர்சனா ரவிபாஸ்கரன் கடந்த *01.07.2020* புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நடுநாயகமூர்த்தி (முன்னாள் போருட் திட்ட இணைப்பாளர்) - நல்லம்மா தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - நவமணி தம்பதியரின் அன்பு மருமகளும் ரவிபாஸ்கரனின் அன்பு மனைவியும் பிரதீபன் (யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), றதீபன் (வ/திருஞானசம்பந்தர் வித்தியாலயம்), தர்சதீபன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவதர்சினி, விஜயதாஜினி (வ/சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை), தனபாஸ்கரன், புஸ்பலீலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிறேமா ஆனந்தபாஸ்கரன், துர்க்கா தனபாஸ்கரன் , பரமநாயகம் ஆகியோரின் அன்புச் சகலியும் டர்மிகன், பிரகதி, கஜமிகன், றஜீவன், சுவர்ணன் ஆகியோரின் பாசமிகு அத்தையும் அனோஜன், சாருஷன், டிஷான், தஷி ஆகியோரின் பாசமிகு சித்தியும் கிறிஸ்ரிக்கா, டிலுக்ஷி ஆகியோரின் பாசமிகு தொட்டம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (20.07.2020) லண்டன் Wembley எனும் இடத்தில் இலங்கை நேரப்படி பி.ப 12.30 மணியளவில் நடைபெறும்.

இந் நல்லடக்க ஆராதனை "Lankasri" இணையத்தளத்தில் நேரடியாக ஒளிபரப்பப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :-
ந. பிரதீபன் -077 662 4387, ந. றதீபன் - 076 273 2982
ந. தர்சதீபன் - 077 162 9385 (சகோதரர்கள்)

தகவல்: குடும்பத்தினர் (3351)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.